No. 2 ஆசிரியர் : சங்கு கணேசன் அணா. 2

மலிவுப் பிரசுரங்கள்: ஆசிரியர் : சங்கு கணேசன்

ஜவஹர்லால் நேரு சுயசரித்திரம்

1000 பக்கங்கள் ரூ. 6க்கு விற்ற புஸ்தகம் ரூ. 3

வாழ்க்கையின் வெறுப்பு

காதல் என்கிறோம்; காமம் என்கிறோம்; இன்னும் என்னென்னவோ சொல்லுகிறோம். ஒரு குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் பணத்திலோ, ரூபசௌந்தரியத்திலோ, மக்கட் பேரிலோ ஒன்றிலும் குறைவில்லை. மணமாகும் சமயத்தில் ஒருவருக்கு மற்றவர் மேலிருந்த அன்பு அளவிடற்கரியது. ஆயினும் அவர்கள் வாழ்க்கை இன்பகரமாயில்லை; கடுவன் பூனைபோல் ஒருவரை ஒருவர் பார்த்து உறுமிக்கொண்டனர். இது என்?

அதுமட்டுமா? பாணிக்ரஹணம் செய்து கொண்ட அதே கையால் வாளை யுருவி மனைவியின் விலாவில் பாய்ச்சுகிறான். இது என்? மஹான் டால்ஸ்டாயின் அனுபவக் களஞ்சியத்திலிருந்து பொருக்கி எடுத்த கதை இது; அற்புதமான தமிழ் நடை. படிக்கப் படிக்கத் தெவிட்டாது. விலை அணா. 4

உத்தம வாழ்க்கை

நமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் பல காரியங்கள் தீமை என்று நமக்குத் தெரியும்: தெரிந்தும் அக்காரியங்களை கொஞ்சம்கூட மனக்கிலேசமின்றிச் செய்து வருகிறோம்; இதற்கு போலி சமாதானங்கள்கூட கற்பித்து தீக்கோழிபோல் பிறர் நம்மைக் கவனியார் என்று மனப்பால் குடிக்கிறோம்.

இக்காரியங்கள் எவை; உண்மையிலேயே நாம் நடந்து கொள்ளவேண்டியது எவ்விதம்? அற நெறிக்கான பாதை எது? இவைகளை ருஷியப் பெரியார் டால்ஸ்டாய் இந்நூலில் பச்சைக் குழந்தைக்கும் விளங்கும்படி எழுதியிருக்கிறார், தீய உணவினால் உண்டாகும் கேடுகளை இனி ஒருவரும் மறக்கமுடியாத முறையில் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா. 2

குழந்தை ராமு

ஒரு சமூக நாடகம் அணா. 4

கண்ணன்—என் கவி

பாரதியாரின் கவிதையும் இலக்கிய பீடமும் அணா. 6

சங்கு காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

உத்தம வாழ்க்கை

முதற் படி

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
... PAGANERI.

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய்

எழுதியதைத் தழுவியது.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN C...
PAGANERI.

சுதந்திரச்சங்கு காரியாலயம்
திருவல்லிக்கேணி : : சென்னை.

முன்னுரை

நமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் பல காரியங்கள் தீமை என்று நமக்குத் தெரியும்; தெரிந்தும் அக்காரியங்களை கொஞ்சங்கூட மனக் கிலேசமின்றிச் செய்து வருகிறோம்; இதற்கு போலி சமாதானங்கள்கூட கற்பித்து தீக்கோழி போல் பிறர் நம்மைக் கவனியார் என்று மனப்பால் குடிக்கிறோம்.

இக்காரியங்கள் எவை? உண்மையிலேயே நாம் நடந்து கொள்ளவேண்டியது எவ்விதம்? அற நெறிக்கான பாதை எது—இவைகளை ருஷியப் பெரியார் டால்ஸ்டாய் இந்நூலில் பச்சைக் குழந்தைக்கும் விளங்கும்படி எழுதியிருக்கிறார். தீய உணவினால் உண்டாகும் கேடுகளை இனி ஒருவரும் மறக்கமுடியாத முறையில் இந்நூலில் விளக்கப் பட்டிருக்கின்றன.

இந்நூலிற் காணப்படும் கருத்துக்கள் தமிழகத்துக்குப் புதிதல்லவென்றாலும், மேனாட்டு பெரியார் ஒருவரின் அலைமேல் அலை எறியும் எண்ணக்கடலிலே இவை மகா சோபிதமாய் விளங்குகின்றன. தமிழ் மொழிபெயர்ப்பின் நடை மிக சரளமானது; படிக்கப் படிக்க இன்பந் தருவது.

PRESENTED BY
V. PR. PL. TH. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

உத்தம வாழ்க்கை

முதற்படி

I

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தனது ஆயுட்காலத்தில் ஏதாவது ஒரு தொழிலைச் செய்துகொண்டு தான் இருக்கிறான். அத்தொழில் பாரமார்த்திகமா யிருக்கலாம்; அல்லது லோகாயதமாக இருக்கலாம். எப்படி இருப்பினும் டம்பத்திற்கு மட்டுமின்றி, உண்மையிலேயே அத்தொழிலைச் செய்து முடிக்கவேண்டும் என்ற சங்கல்பத்துடன் செய்ய வாரம்பித்தால், அத்தொழிலின் தன்மைக்கு ஏற்றவாறு படிப்படியாகச் செய்து முடிக்கவேண்டும். படிப்படியாகச் செய்யாமல் முதலிற் செய்யவேண்டியதைப் பின்னும், பின்னால் செய்யவேண்டியதை முன்னும், சில அவசியமான பாகங்களைச் செய்யாமல் விடுத்தும் அத்தொழிலில் முனைவானாயின், அவன் அத்தொழிலைச் சிரத்தையுடன் செய்தவனாக மாட்டான். அவ்வேலை வெறும் பகட்டு வேலையாகவே முடியும். இந்த விதி பாரமார்த்திகமான தொழிலுக்கும், லௌகிகமான தொழிலுக்கும் பொருந்தும்.

மாவைப் பிசைவது, அடுப்பை மூட்டுவது, அனலை விசிறுவது போன்ற ஆரம்ப காரியங்களைச் செய்யாமல் எவ்விதம் ரொட்டி சுட முடியாதோ, அதேபோல தர்மநெறியில் வாழ விரும்புவோர் அதற்கான ஆரம்ப விதிகளை அப்பியசிக்காமல் அறத்துடன் வாழ முடியாது.

பிரஸ்தாப விதி, அறநெறி சம்பந்தப்பட்டவரை மிகவும் ஜாக்ரதையாகக் கவனிக்கப்படவேண்டும். ஏனெனில் லௌகிக விஷயங்களால் பலன் பிரத்யக்ஷமாகத் தெரிந்து விடும். உதாரணமாக, மாவைப் பிசைவது போன்ற ஆரம்ப காரியங்களைச் செய்யாமற்போனால் நிச்சயமாக ரொட்டி உண்டாக்க முடியாது. அப்படியல்ல அறநெறி விஷயத்தில்; பிரத்தியக்ஷ பலன் இதில் காண முடியாது. ஆதலின் அவன் உண்மையாகவே சிரத்தையுடன் அத்தொழிலைச் செய்தானா அல்லது தொழில் செய்வதுபோலப் பாசாங்கு செய்தானா என்று கண்டு பிடிப்பது சிரம சாத்தியம். ஒரு மனிதனுடைய செயல்கள் உலகத்திற்கு மிகவும் உபயோகமுள்ளவைகளா யிருக்கலாம்; பிறர் அவைகளை மெச்சலாம்; ஆயினும் அம்மனிதனுடைய வாழ்க்கை அறத்தில் அமைந்ததாக இருக்கவேண்டு மென்ற கட்டாய மில்லை.

ஆதலின் ஒரு மனிதனுடைய வாழ்க்கை தூய்மையானதா அல்லது கெட்டதா என்று காணவேண்டுமானால், அம்மனிதன் அறநெறிக்கான ஆரம்பப் பயிற்சிகளில் படிப் படியாகத் தேர்ச்சிபெற்று வந்திருக்கிறானா என்பதைக் காண வேண்டும். இதுவே பிரமாணம். இந்தச் சோதனை பிறர் விஷயத்தில் உபயோகப்படுவதைக் காட்டிலும் நமது சொந்த விஷயத்தில் மிகவும் பிரயோசனமுள்ள தாகும். ஏனென்றால், இதுபோன்ற ஆத்மார்த்திகச் செயல்களில் நாம் பிறரை ஏமாற்றுவதைவிட நம்மை நாமே ஏமாற்றிக்கொள் வதுதான் அதிகம்.

ஆதலின் அறநெறியில் வாழ விரும்புவோர், அதற்கான ஆரம்பப் பயிற்சிகளில் படிப்படியாகத் தேர்ச்சிபெற வேண்டியது அத்தியாவசியம். இதைச் உத்தேசித்தே பெரியோர் அறநெறிக்கான பயிற்சிகள் இன்னவை யென்று நிர்ணயித்து வைத்திருக்கின்றனர்.

பொதுவாக எல்லா தர்மசாஸ்திரங்களுமே அறநெறிக் கான படிகளைப்பற்றிக் கூறுகின்றனர். ஒரு சீன தேசத் துப் பெரியார் சொல்லுவதுபோல இந்தப் படிகள் பூமிக்கும்

வானுக்குமாக அளாவியிருக்கின்றன. இந்தப் படிக்கட்டில் உச்சிக்குப் போகவேண்டுமானால், முதல் படியிலிருந்து ஒவ்வொரு படியாகத் தாண்டிச் சென்றால் தான் முடியும். பிராம்மண மதம், பௌத்த மதம், கன்பூஷியனின் மதம் இவைகளில் கூறியிருப்பதுபோல, கிரேக்க மார்க்கத்திலும் இந்தப் படிகளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. உயரேயுள்ள ஒருபடியில் கால் வைக்கவேண்டுமென்றால், அதற்குக் கீழுள்ள படியைத் தாண்டினாலொழிய மேற்படிக்குச் செல்ல முடியாது. மனு மாந்தாதாக்கள் எல்லாருமே, இந்தப் படிகளின் அவசியத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்களாத லின், நாம் எல்லோரும் இதன் அவசியத்தைநன்கு உணர வேண்டும்.

II

பண்டைக் காலத்திலிருந்தே, அதாவது கிறிஸ்துமதம் தோன்றுமுன்பு முதலே, சோக்ராத்தன் என்ற பெரியார் காலந்தொடங்கி 'உலகில் அறத்துடன் வாழ்வதெப்படி?" என்ற விஷயத்தைப் பற்றி உபதேசிக்கும் பெரியார்கள், அற நெறிக்கு ஆரம்பப்படி புலனடக்கம் என்று கூறிவந்திருக் கின்றனர். அறங்களெல்லாம் இதிலிருந்தே ஆரம்பிக்கின் றன என்பது அவர்கள் கருத்து. தன்னைத்தானே அடக்கி யாளச் சக்தியற்றவன், ஆயிரத்தெட்டுக் கெட்டபழக்கங்களை யுடையவன், அறநெறியில் வாழமுடியாதென்பது அவர்கள் கொள்கை. உண்மையுடனும் நீதியுடனும் நடந்துகொள்ளு முன்பு, தாராள நோக்குடன் பிறரை நேசிக்கவேண்டுமென் பது இன்னும் உயர்ந்தபடியாதலின் அதைப்பற்றி இப் பொழுது பேசவேண்டாம். மனிதன் தன்னையடக்கக் கற்றுக் கொள்ளவேண்டுமென்பது அவர்கள் சித்தாந்தம். ஆனால் இக்காலத்திலோ, இந்தச் சங்கடங்களெல்லாம் தேவையே இல்லை. ஒரு மனிதன் ஆயிரம் கெட்ட பழக்கங்களைக் கைக் கொண்டிருக்கலாம்; தனது மிருக இச்சைக்கு அடிமையாக

இருக்கலாம்; பின்னும் அவன் அறநெறியில் வாழ்வதாகக் கூறிக்கொள்ளலாம்!

எந்த மதக்கோட்பாட்டுடன் நோக்கினும் சரி, ஒரு மனிதன் தனது சுகவாழ்வுக்காக அந்த சுகமில்லாமலும் உயிர் தரித்திருக்கும் பிறர் உயிரை வாட்டி வேலைவாங்கினால், அந்த வாழ்வு ஒருபோதும் நல்வாழ் வாகாது. ஆதலின் பிறர் கஷ்டப்பட்டுச்செய்த வேலையைத்தன் சுகத்திற்காக உபயோகித்துக்கொள்ளும் ஈனத்தொழிலை ஒழிப்பதே அறவாழ்வின் முதற்படியாகும்.

மேலும் இவ்விதமான சுகவாழ்வு ஆபத்கரமானதுமாகும். எப்படியெனில், இம் மனிதன் எப்பொழுதும் தன் சுகத்திற்குப் பிறர் கையை எதிர்பார்த்து நிற்கவேண்டும்; சுகமில்லாமலும் வாழமுடியாது. இவன் சுகத்திற்காக உழைக்கிறார்களே அவர்கள் நிலைமையைக் கவனிப்போமானால், அவர்களுக்கு எஜமான்மீது வெறுப்பும் அசூயையும் தான் வளர்கின்றன. பிறருக்காகப் பாடுபடும் ஈனவாழ்விலிருந்து விடுதலையடையச் சந்தர்ப்பம் எப்பொழுது ஏற்படுமென்று எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கின்றனர். கடைசியில் சுகவாழ்வு வாழும் மனிதனின் நிலைமை என்ன? தன்னை விட்டுப்போகமாட்டேன் என்று கெட்ட பழக்கங்கள் ஒருபுறம் உடும்பாகப் பற்றிக்கொள்கின்றன; மற்றொருபுறம் இக் கெட்ட பழக்கங்களை திருப்திசெய்யும் தேவைகள் அகப்படுமோ அகப்படாதோ என்ற நிலைமையில் இருக்கின்றன.

பிறர் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் சுகப்பொருட்களை அவர்களுக்குத் துளிக்கூட அனுபவிக்கச் சந்தர்ப்பமளிக்காது மற்றொருவன் ஏகபோகமாக அனுபவிப்பது நீதியாகுமா?

கிறிஸ்து மத போதனைகளின்படி பார்த்தாலும், இவ் வழக்கம் கொடியதென்று புலப்படும். பிறரை நேசி என்பது ஏசுநாதரின் உபதேசம். இவ்வுபதேசத்தைப் பின்பற்றுபவர்கள் பிறருக்காக, அதாவது ஏழைகட்காகத் தாம் உழைப்பார்களே யன்றி, அவர்களின் உழைப்பைத் தங்கள் சுகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள்.

ஆதலின் எப்படிப் பார்க்கினும் ஒருவன் உழைப்பை மற்றவன் பயன்படுத்திக் கொள்வது தருமமன்று என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த உண்மையைத்தான் தற்கால மனித சமூகம் முற்றிலும் மறந்து விட்டிருக்கிறது. அற வாழ்வுக்குப் புலனடக்கம் இன்றியமையாத சாதனம் என் பதையே நமது சமூகம் நினைக்க வில்லை; ஏன், அதை அனு வசியமென்றே கருதுகிறது!

தற்பொழுதைய உலகம் இருக்கிறதே, அது மகா விசித் திரமானது. மனிதனுடைய தேவைகள் அதிகப்பட அதி கப் படத்தான், நாகரீகம் வளர்வதாகக் கருதுகிறது! மனித னுடைய சௌக்கியம் அதிகரிப்பதைத் தீங்காகக்கருதவில்லை; மிகவும் விரும்பத் தக்கதாக நினைக்கிறது; ஆத்மார்த்திகத் துறையில் அதை ஒரு படியாகக் கொள்கிறது; ஏன், அதை அறம் என்றே கருதுகிறது! மனிதனின் தேவைகள் எவ் வளவுக் கெவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளக் கவ் வளவு நன்மை என்ற எண்ணம் பரவியிருக்கிறது.

நமது கதைளில் லக்ஷிய புருஷர்களாகத் தோன்றும் கதா நாயக நாயகிகளின் தன்மைதான் என்ன?

ஆசிரியர்கள் அவர்களை மகா புருஷர்களாகச் சிருஷ்டிக்க வேண்டுமென்று தான் எண்ணிச் செய்தார்கள். ஆனால் உண்மை யென்ன? சைல்ட் ஹெறால்ட் தொடங்கி, ட்ரல் லட், மாபஸான் இவர்களுடைய கதா பாத்திரங்கள் வரை எடுத்துக் கொண்டோமானால், அவர்கள் எல்லோரும் முழுச் சோம்பேறிகள் என்பது தெரியவரும். தாங்கள் ஒரு பிரா ணிக்கு உபகாரம் செய்வது கிடையாது; ஆனால் ஆயிரம் பேர்களின் உழப்பைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்வது; கதாநாயகிகளோ தங்கள் காதலர்களின் காதலிகளா யிருப் பதைத் தவிர, பிறருக்கு நிஷ்பிரயோசனமா யிருக்கிறார்கள்.

சிலத்தில் மிகுந்தவர்களாயும் உழைப்பாளிகளாயும் கதா பாத்திரங்கள் ஒரோர் சமயம் தோன்றுகிறார்கள். அவர் களைப்பற்றி நான் கூறவில்லை. சாதாரணமாக, பெரும் பான்மை மனித சமூகத்தின் லக்ஷிய புருஷர்களான பாத்

திரங்களையே பற்றிப் பேசுகிறேன். முதலிற் கூறிய ரகம் மிகவும் அரிதே; அவர்களைப்போல நாமும் வாழவேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். அப்படியல்ல பின்னது. அந்த ரகத்தில் கதா பாத்திரங்களைச் சிருஷ்டிப்பது கடினம்; நானும் அந்தச் சிரமத்தை அனுபவித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அந்தச் சிரமத்தின் காரணம் விளங்காம லிருந்தது. இப்பொழுதுதான் தெரிகிறது; உண்மையான அழகு எது என்பதை அறிந்த ஒவ்வொரு நாவலாசிரியனும் அந்தக் கஷ்டத்தை யனுபவித்திருப்பான். ஏனென்றால் பணக்கார சமூகத்திலிருந்து லக்ஷிய புருஷர்களாக, நல்லவர்களாக, பிறரிடம் அன்பு கொண்டவர்களாகப் பாத்திரங்களை சிருஷ்டிப்பது கடினமாயிருக்கிறது; சேற்றிலிருந்து செந்தாமரையைச் சிருஷ்டிக்க வேண்டும். உண்மை நடப்புக்கும் ஒத்திருக்கவேண்டுமோ இல்லையோ?

படித்த, உயர்தர வகுப்பைச் சேர்ந்த கதா நாயக நாயகிகள் சுகத்தில் புரண்டு கொண்டிருக்கவேண்டும்; முழுச் சோம்பேறிகளா யிருக்கவேண்டும்; இவர்களின் தேவைகள் எண்ணிறந்தவைகளா யிருக்கவேண்டும். இப்படி அமைத்தால்தான் 'ரியலிஸ்டிக் ஆக' (உண்மைக்கு ஒத்ததாக) இருக்கிறது என்று ஜனங்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் ஆத்மீகமாகக் கவனித்தால், இந்தக் கதாநாயக நாயகிகள் மகா ஆபாசமானவர்கள் என்பது தெளிவாகும். ஆயினும் இந்த ஆபாசக் களஞ்சியங்களுக்கு அழகுடை போர்த்து விடவேண்டியிருந்தது. அவ்விதமே கதாசிரியர்கள் செய்து வந்தனர். நானும் செய்தேன்! ஆனால் இந்த அயோக்கியர்கள், கொலைபாதகர், பிறர் மனைவியை இச்சிப்பவர், திருடர், சோம்பேறிகள், கோமாளிகள்—இவர்களுக்குப் பட்டுடை அணிவிப்பது மிகவும் இலகுவானது என்பதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதற்கு அதிகத் திறமை வேண்டியதில்லை. கதா வாசகர்களும் அநேகமாக இதே ரகத்தைச் சேர்ந்தவர்களாதலின், இந்தச் சைல்ட் ஹெரால்ட்களையும், ஒனிஜனிஸ்களையும், டிகமார்ஸ்களையும் மிகவும் உத்கிருஷ்டமான படைப்புகளாகவே எண்ணுவர்.

III

இக்காலத்தில் ஜனங்கள் சுயநலப் பரித்தியாகம், புல னடக்கம் இவ்விரண்டையும் அறநெறிக்கு உகந்த சாத னங்களாகவே கருதவில்லை; தேவை யதிகரிப்பையே நன்மை யென்று கருதுகிறார்கள். இந்த உண்மை, நமது குழந்தை களுக்கு அளிக்கப்படும் கல்வி முறையிலிருந்தே நன்கு விளங்கும். நமது குழந்தைகளுக்கு, தன்னலங்கருதாம லிருக்க ஏதாவது பள்ளிக்கூடங்களில் போதிக்கின்றனரா? அல்லது தேவைகளைக் குறைப்பதற்குப் போதிக்கிறார்களா? இரண்டு மில்லை. பேடித்தனம், கையாலாகாமை, எண்ணற்ற தேவைகள் இவைகள்தாம் வேண்டுமென்றே அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

வெகு நாட்களாக எனக்குப் பின்வருமாறு ஒரு நாவல் எழுதவேண்டுமென்ற ஆசை யிருந்து வருகிறது: ஒரு ஸ்திரீ. இவளை மற்றொரு ஸ்திரீ ஏளனம் செய்கிறாள். முதல் ஸ்திரீ இதற்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று விரும்புகிறாள். அதற்காகத் தன் விரோதியின் குழந்தையை அபகரித்துக் கொண்டு ஒரு மாந்த்ரீகனிடம் செல்கிறாள். அவனிடம், எவ்விதம் மிகவும் கொடுமையாக வஞ்சம் தீர்க்கலாம் என்று ஆலோசனை கேட்கிறாள். அதற்கு மாந்த் ரீகன் அக்குழந்தையை ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்லு மாறு கூறி, அவ்விதம் செய்தால், மிகக் கொடுமையான முறையில் வஞ்சம் தீர்க்கலாம் என்று கூறுகிறான். அவ் விதமே செய்கிறாள் அந்த ஸ்திரீ. ஆனால் தூரத்தில் இருந்த வாறே அக்குழந்தையின்மீது கண்ணாக இருந்து வருகிறாள். குழந்தையை, ஒரு மலட்டுத் தனிகன் எடுத்து வளர்க்கிறான். அதைஅவன் செல்வமாக வளர்த்து வருகிறான். இதைக்கண்டு ஆத்திரமுள்ள அம்மாது மாந்த்ரீகனிடம் சென்று 'இதுதானா வஞ்சம் தீர்க்கும் வழி?' என்று அவனை ஏசுகிறாள். மாந்த்ரீ கன் அவளைச் சமாதானம் செய்து பொறுத்திருந்து விஷயங் களைக் கவனிக்குமாறு கூறுகிறான். குழந்தை சுகத்தில் புரண்டு வளர்கிறது. அதோடு பேடித்தனமும் வளர்கிறது.

அம்மாதுக்கு மனச்சாந்தி மறுபடியும் கலேகிறது. மாந்த்ரீகனிடம் செல்கிருள். மாந்த்ரீகன் பின்னும் சமாதானம் செய்து அனுப்புகிருன். கடைசியில், அப்பெண் தனது வஞ்சம் சரியானமுறையின்நடந்தேறியதெனக்காண்கிருள்; குழந்தையிடம் இரக்கம்கூடக் கொள்கிருள். குழந்தை சிறையாகிருன். பணத்தை ஊதாரித்தனமாகச் செலவிடுகிருன். ஏழ்மை பற்றிக்கொள்கிறது. அதன் கொடுமைகள் அவனைப் பன்மடங்கு பாதிக்கின்றன. செல்வத்தில் வளர்ந்தவனல்லவா ? நிலேமையைச் சமாளிக்கமுடியாமல் திணறுகிருன். உடனே அறவாழ்வு வாழவேண்டுமென்று விரும்புகிருன். ஆனுல் அவனுடைய ஊளேச்சதை அதற்கு இடங்கொடுக்க மறுக்கிறது. வீணே சிரமப்படுகிருன். கடைசியில் பாதாளத்தில் வீழ்கிருன்; மதுவைக் குடித்து மனக் கவலேயொழிக்கப் பழகுகிருன். கொலே; பைத்தியம்; தற்கொலே; இதோடு அவன் வாழ்வு முடிகிறது.

உண்மையிலேயே பணக்காரவீட்டுக் குழந்தைகள் இருக்கின்றனவே, அவைகளின் படிப்பை நிணேக்கும்போது எனக்குப் பயங்கரமாயிருக்கிறது. ஒரு மகா கொடியவிரோதிகூட அவர்களின் பெற்ருேர் செய்வதுபோல் அவ்வளவு கர்ம சிரத்தையாக அவ்வளவு தீய பழக்கங்களேயும் உடலில் "இஞ்ஜெக்ஷன்" (ஊசி குத்துதல்) செய்யமாட்டார்கள். அதிலும் தாய்மார்கள் செய்யும் தீங்கு மகா கொடியது இந்தக் கெட்ட பழக்கங்களின் விளேவாக அந்தக் குழந்தைகளின் மனதுக்குள் சஞ்சரிக்கும் எண்ணங்களே அறியும் திறன் ஒருவனுக்கு இருக்குமாளுல், அவை அத்தியந்த பயங்கரமாய்த் தோன்றும்.

பிஞ்சிலேயே பேடித்தனம் என்ற கொடிய விஷம் குழந்தைகளின் இரத்தத்தில் கலந்துவிடுகிறது. பேடித்தனத்தின் பலன் என்னவென்பதை அறிய இன்னும் அவர்களுக்கு அறிவு முதிர்ந்திருக்காது. புலனடக்கம் தன்னலத்தியாகம் என்ற சத்போதனேகள் அறவே புறக்கணிக்கப் படுகின்றன. அதோடு நின்ருலும் தேவலே; இந்தப் போதனேயுடன் பாஷா

ணத்தைக் கலந்துவிடுகின்றனர். எப்படியென்ருல் அவனை உடல் நோவும்படி வேலை செய்ய அனுமதிப்பதில்லை. அதன் மூலம் வேலை செய்வதனுல் ஏற்படும் நல்விளைவுகளுடன் ஏகாக்ரசிந்தை, விடாமுயற்சி, திடசித்தம், ஊக்கம், உடைந்ததை ஒக்கிடும் ஆற்றல், காரிய சித்தியினுல் ஏற்படும் சந்தோஷம் ஆகியவற்றின் அறிமுகம்கூட ஏற்படாதவாறு தடுத்து விடுகின்றனர். சோம்பேறித்தனம், வேலை செய்வதைக் கண்டு இகழ்தல், வீண் விரயம், கண்டதைப் பணங் கொடுத்து வாங்கும் பழக்கம், (அந்தச் சாமான்கள் செய்வதெப்படி என்ற எண்ணம் கொஞ்சம்கூட ஏற்படுவதில்லை) இவைபோன்ற துரப்பியாசங்களையும் கற்பித்துவிடுகின்றனர். இவ்விதம் பயிற்சிபெற்று, மனிதனுக உலகத்தில் வெளிப்படுகையில் எல்லாவற்றுக்கும் இன்றியமையாத 'விவேகம்' என்ற சாதனமின்றி வெளிப்படுகிருன். ஆனுல் வெளியுலகத்திலோ நீதி, அறம், பிறர் சேவை போன்ற பெரிய விஷயங்கள்தான் பேசப்படுகின்றன; அதை எல்லோரும் கேட்டு ஆரவாரமும் செய்கின்றனர்.

இந்தவாலிபன் உண்மைத் தத்துவத்திற்கும் வேஷத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறியும் ஆற்றல் இல்லாதவனுயிருந்தால் தேவலை; ஏனெனில் அதை உலக நடப்பில் கண்டு விசேஷ மனக்கிலேசம் கொள்ளமாட்டான். ஆனுல் அந்த ஆற்றல் பெற்றவனுக இருந்துவிட்டாலோ - அநேகமாக அப்படித்தான் இருக்கிறது - அவன் அனுபவிக்கும் மனோவேதனை சகிக்கமுடியாது. அற எண்ணத்திற்கும் ஏமாற்ற எண்ணத்திற்கும் அவன் மனத்துள்ளே பெரும் போர் நிகழும். இந்தப் போரில் முக்காலே மூணு வீசமும் அறம் தலை தூக்குவ தில்லை.

தான் நடத்தும் வாழ்க்கை கெட்டது என்று உணர்வான். அதைத் திருத்தியமைக்க முயல்வான். ஆனுல்இந்தச் சமயத்தில் அவனுக்குப் பல ஆலோசனையாளர்கள் வந்து சேர்வார்கள். இந்தப் புனிதர்கள் இதே போரில் உழன்று அறத்தை உதறியவர்களாக இருப்பர். தங்கள் அனுபவத்

தைக்கூறி, வாழ்க்கையைத் திருத்தியமைக்க வேண்டியது அனுவசியம் என்று போதனை செய்வார்கள். ஒரு மனிதன் நல்லவன் என்று பெயரெடுக்க, தன்னடக்கமும், இந்திரிய நிக்ரகமும் தேவையில்லை; சம்பிரமமான சாப்பாடு, குசாலாய்ப் பொழுது போக்கல்-இவைகளின் மூலமாகவே நல்லவனாக வும், பரோபகாரியாகவும் மாறிவிடலாம் என்று எடுத்துரைப் பர். முடிவில் இவர்களின் போதனைக்கிணங்கி, அந்தராத் மாவின் கூக்குரலைக் கவனிக்காதிருந்து விடுவான்; தன் செய்கைக்குத்தானே சமாதானம் கூறிக்கொள்வான்; பழைய கருப்பனாக மாறிவிடுவான்; எல்லாவற்றுக்கும் மேலாக, தெய் வங்களுக்குப் பிரார்த்தனை செய்வதன் மூலமாகவோ அல்லது தேசம், கலை, சையன்ஸ் இவைகட்குச் சேவைசெய்தோ பிரா யச்சித்தம் செய்துகொள்ளலாம் என்றும் தீர்மானித்து விடு வான். அல்லது பழைய வாழ்க்கையால் மோதுண்டு, பைத் தியம் பிடித்து, தற்கொலைசெய்து கொள்வான். தற்கால வாழ்க்கையில் கெட்டுப்போவதற்கு வழிகள் அனந்தம் இருக்கின்றன. ஆதலின் அந்த வலையில் சிக்குண்டு, கடைத் தேறுவதற்கு வழி தெரியாது மாய்வான். தர்மநெறியில் வாழ்வதற்கு முதன்முதலாகக் கெட்டபழக்கங்களை அறவே யொழிக்கவேண்டும்; தன்னை அடக்கக் கற்றுக்கொள்ளவேண் டும்; சுயநலத்யாகம் செய்யவேண்டும்; அதற்குப்பின்னர்தான் உயர்ந்த அறங்களை யடைதல் கூடும் என்ற உண்மை இக் கால மக்களுக்கு இலகுவில் புலப்படுவதில்லை. ஆயிரம் வரு ஷங்களுக்கு முன்பு இவைகள் சர்வசாதாரண உண்மை களாய் விளங்கின.

IV

இப்பொழுதுதான் நான் இரண்டு பிரமுகர்கள் ஒரு வருக்கொருவர் எழுதிய கடிதங்களைப் படித்துக் கொண்டி ருந்தேன். இருவரும் மெத்தப் படித்தவர்கள்; பெரிய சீர் திருத்தவாதிகள். இவர்களில் ஒருவர் தேசப்ரஷ்டரான

ஓகாரியாப்; மற்றவர் ஹெர்ட்ஸன். ஓகரியாப் தாம் எழுதிய கடிதங்களில் தமது அந்தரங்கமான எண்ணங்களைத் தெரிவிக்கையில் பெரிய விஷயங்களைத் தமது லக்ஷ்யமாகக் கொண்டிருப்பதைத் தெரிவிக்கிறார். ஆயினும் அவர் எல்லா இளைஞர்களையும் போலவே தமது நண்பரிடம் தம்மைப் பற்றி ஜம்பமாக எழுதுகிறார். ஒவ்வொருவனும் தன்னைத் தானே அப்பழுக்கின்றி வைத்துக்கொள்ள வேண்டுமென்கிறார்; தெய்வீக நட்பு, காதல், சாஸ்திரசேவை, மனிதவர்க்கத்துக்குச் சேவை இவைகளைப்பற்றியெல்லாம் பேசுகிறார். அதே சமயத்தில், தன்னுடன் வசிக்கும் ஒருவருக்கு அடிக்கடி கோபம் வரும் முறையில் தாம் நடந்துகொள்வதாகவும் எழுதுகிறார். இரவில் மது மயக்கத்துடன் வீடு திரும்புகிறாராம். பல மணி நேரங்கள் தம் காதலிகள் மனம் துடிக்குமாறு விட்டுச் சென்று விடுகிறாராம்!

இவர் படித்தவர்; இளகிய நெஞ்சமுடையவர்; இம்மனிதர் பூரண கர்ப்பிணியான தமது மனைவியை விட்டு (அடுத்த கடிதத்தில் தமது மனைவி பிரசவித்து விட்டதாகத் தெரிவிக்கிறார்)கண்ட பெண்களுடன் கூடிச் சுகிப்பதும்,மது மயக்கத்தில் வீடு திரும்புவதும் தவறு என்று கொஞ்சம் கூட எண்ணவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. தர்ம நெறியில் வாழ்வதற்கான முதலப்பியாசங்களைக்கூட இவர் தொடங்கவில்லை; கள்ளுண்ணலைத் தவிர்க்கவில்லை; கூத்தியர்களுடன் குலவுவதை விடுக்கவில்லை; இந்த நிலைமையில் இவர் நட்பு, காதல், பிறர்நலம் பேணுதல் இவைகளைப்பற்றிப் பேச அருகரல்லர் என்பதை இவர் உணரவில்லை. தனது தீய பழக்கங்களை ஒழிக்க விரும்பாதது மட்டுமல்ல; அவைகளில் ஒரு 'ஜோர்' இருப்பதாகவும் அவர் கருதுகிறார்; இத்தீய பழக்கங்கள் தர்ம வாழ்வு வாழ்வதற்கு குறுக்கே நில்லாது என்றும் நம்புகிறார். எவ்வளவு மோசம் பாருங்கள். இந்த எண்ணத்தினால்தான் அவர் இவ்விழுக்குகளைத் தமது நண்பரிடமிருந்து மறைக்காமல், அவைகளை விஸ்தரித்து எழுதியிருக்கிறார்.

ஐம்பது வருஷங்களுக்குமுன் நடந்த சங்கதி இது. எனக்கு இவ்விருவரையும் நன்றாகத் தெரியும். இவர்களுடனும் இவர்களைப் போன்றவர்களிடமும் நான் பழகியிருக்கிறேன். இவர்கள் எல்லோரிடமும் நான் கண்ட உண்மை என்னவென்றால், இவர்களின் குணவிசேஷங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமின்றி அமைந்திருந்ததாகும். இவர்கள் எல்லோருக்கும் நல் வாழ்வு வாழ வேண்டுமென்று ஆசையதிகம்; ஆனால் காமக் குதிரைகளின் லகானை மிகவும் தளர்த்திவிடுவர்; இக்காமச் செயல்களால் நல்வாழ்க்கை நடத்துவதற்கு இடைஞ்சல் விளையாது, பிறர்க்கு உபகாரம் செய்வது இதனால் கெடாது என்பது இவர்கள் நம்பிக்கை. நன்றாகப் பிசையாத மாவை, நெருப்பில்லாத அடுப்பில் வைத்தால் ரொட்டி தயாராகிவிடும் என்று எதிர்பாரர்த்த பேர்வழிகள். வயதானபின்புதான் தாங்கள்வைத்த ரொட்டி 'உப்ப'வே யில்லை என்று தெரிந்துகொண்டனர். அப்பொழுது, தாங்கள் வாழ்க்கையில் வெற்றிபெறாமற் போனது வாழ்க்கையின் விசித்திரங்களில் ஒன்று என்று கூறினர்.

இவர்களைப் போன்றவர்களின் வாழ்க்கை, உண்மையில் மகா கோரமானதே! இந்தக் கோரம் இந்தக் காலத்திலும் மேற் குறிப்பிட்ட கொள்கைகளையுடைய படித்த வாலிபர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. ஒருவன் அறநெறியில் வாழ விரும்புகிறான்; ஆனால் அதற்கு வேண்டிய முறை இந்தச் சமூகத்திலிருந்தே மறைந்துவிட்டிருக்கிறது. அன்று ஒகாரிப், ஹொர்ட்ஸன் போலவே, இக்காலத்து யுவர்களும் வாய்க்குப் பிடித்ததைத் தின்று இந்திரியங்களின் தேவையைப் பூர்த்திசெய்து பேடிவாழ்க்கை வாழ்ந்துகொண்டே அறவாழ்வுக்குத் தாண்டி விடலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர். கடைசியில் தாங்கள் வாழ்வது அறவாழ்வு இல்லை என்பதை யறியும்போது "ஓ! மனிதனாவது, கடைத்தேறவாவது" என்று சூள் கொட்டுகின்றனர்.

இவ்வளவு காரியத்திலும் இந்த யுவர்கள் (1) உலகத்தில் சுகவாழ்வு எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்பதை

யறிவார்கள் (2) மனிதனுக்கு மனிதன் உள்ள இந்த வித்தியாசம் தீமை என்பதை யறிவார்கள் (3) இந்த வித்தியாசத்தைத் தவிடுபொடியாக்கியே தீரவேண்டும் என்று வீரம் பேசுவார்கள். ஆயினும் தாங்கள் அனுபவிக்கவேண்டிய லீலாவினோதங்களில் இன்னும் என்னென்ன பாக்கி என்று ஆராய்வார்கள்—அதாவது தாங்கள் எதைத் தீமை என்று கருதுகிறார்களோ அத்தீமையைப் பெருக்க முயல்கிறார்கள்! ஒருவன் ஒரு மாந்தோப்புக்குள் நுழைந்தான்; பின்னால் வருபவர்களை உள்ளேவரவொட்டாது தடுத்தான். கிடைத்த கனிகளையெல்லாம் அவசரம் அவசரமாகப் பொறுக்கினான். ஆனால் எல்லோரும் சமமாகவே கனிகள் பொறுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டான். இருந்தபோதிலும் எங்கெங்கே கனிகள் இருக்கின்றன என்று பார்த்து விழுந்து விழுந்து பொறுக்கினான். இவன் கதைபோல் இருக்கிறது பிரஸ்தாப யுவர்களின் வாதம்.

V

இந்திரியங்களுக்கு ஏகபோக ஆட்சி வழங்கி, காம வாழ்க்கையைக் குற்றமற்றதெனக்கருதி, அதன் மூலமாகவே அறவாழ்க்கையையும் நடத்தலாம் என்று இக்காலத்து மக்கள் மனப்பால் குடிப்பதைப் பார்க்கையில் ஒரு சந்தேகம் உண்டாகிறது. அதாவது, வருங்காலத்தில் ஜனங்கள், இக்கால மக்கள் ‘அறவாழ்வு’ வாழ்ந்தார்கள் என்று படிக்கும்போது ‘அறம்’ என்றசொல்லுக்கு என்ன பொருள் கொள்வார்கள்? விஷயம் புரியாமல் திகைப்பார்க ளல்லவா?

ஆகையால் ஒவ்வொரு மனிதனும் சீலமாக வாழ்வதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியின் ஆரம்பமாக, தன்னிடமுள்ள துரப்பியாசங்களை நீக்கவேண்டும்.

கெட்ட வாழ்க்கையைச் சீர்திருத்த வேண்டாமென்பதற்கு எத்தனை விசித்திர வாதங்கள் இருக்கின்றன தெரி

யுமா? கூறுகிறேன். முதலாவது, நாட்டு நடப்புக்கு விரோதமாக நாம் நடந்துகொண்டால் அது இயற்கைக்கு முரணுகும் என்பதாகும். இந்த வாதம் எவ்வளவு பயித்தியக்காரத் தனமானது! இதற்குப் பதில்: உலகம் முழுவதும் தர்மம் நிறைந்திருந்தால், மனிதர்கள் எல்லோருமே அறவாழ்வு வாழ்வார்கள். அப்பொழுது நாட்டு நடப்பை யொட்டிச் செய்யும் வேலை அறம் அமைந்ததா யிருக்கும் அப்படியின்றி மனிதர்களில் பாதிப்பேர் நல்லவர்களாயும், மற்றப் பாதி கெட்டவர்களாயும் இருந்தால், இந்த நிலைமையில் செய்யப் படும் காரியம் நல்லதாயு மிருக்கலாம் கெட்டதாயு மிருக்கலாம். ஆனுல் ஜனங்கள் அனைவருமே கெட்டவர்களாயிருந்தால்—நமது பணக்கார சமூகம் போல-அப்பொழுது அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவன், சமூகத்தின் நடப்பை யொட்டிச் செய்யும் காரியம் எப்படி யிருக்கும் என்று சொல்லவேண்டுமா? அப்பொழுது நாட்டு நடப்பிற்கு விரோதமாகச் செய்தால்தானே நல்ல காரியம் ஏதாவது செய்ய முடியும்?

தற்காலத்தில் பணக்கார சமூகத்தில் உள்ள ஒருவனுவது நற்காரியம் செய்யமுடியாது; தனது வாழ்க்கையையே அடியுடன் மாற்றிஞலொழியச் செய்யமுடியாது.

மனிதனின் தர்ம வாழ்க்கைக்கு ஒரு அளவுகோல் இருக்கிறது. அதுவே ஆத்ம ஸ்நேகத்திற்கும் பிறரை நேசிப்பதற்கும் உண்டான தாரதம்யம். ஆத்மஸ்நேகம் குறையக் குறைய பிற ஜீவன்களிடம் அன்பு அதிகரிக்கும். அப்பொழுது வாழ்வின் சீலத்துவம் அதிகரிக்கும். இவ்விதம் தான் மதப் பெரியார்கள் அறநெறியை அளந்து வந்திருக்கின்றனர்; பாமர மக்களும் இவ்விதம்தான் அதை அறிவர். தன் தேவைகள் குறையக் குறைய நன்மை; பிறர் தேவைகளைக் குறைக்கக் குறைக்கக் கெடுதி.

இவ்விதம் பிறனிடத்தில் அன்புகொண்டு அவன் தேவைகளுக்குப் பாடுபடுதல் ஆத்மார்த்திகத் துறையில் மட்டுமின்றி லௌகிகத்துறையிலும் நன்மையேயாகும். ஒரு

மனிதனுக்குத் தன் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க, பிறர் கைபார்த்து நிற்கவேண்டிய அவசியம் அதிகரிக்கிறது. அத் தேவை குறைந்தால், அந்த அவசியம் குறைகிறது; பிறனுக்கு மேலும் மேலும் உதவமுடிகிறது. இவ்விதம் பிறனுக்குச் செய்யும் உதவி தன்னலத்தியாகத்தின் அளவைவிடப் பன் மடங்கு அதிகமாகும்.

நாம் பிறரை நேசிப்பதாக எண்ணுகிறோம்; நமக்கும் பிறருக்கும் அவ்விதமே உறுதி கூறுகிறோம். ஆனால் இந்த நேசம் சில சமயங்களில் பேச்சுடன் நின்றுவிடுகிறது. ஏனென்றால் உண்மையில் நம்மைத்தான் நாம் அதிகமாக நேசிக்கிறோம். பிறருக்கு உணவளிக்க மறந்துவிடலாம்; ஆனால் நமக்கே நாம் உணவளித்துக்கொள்ள மறந்து விடுவோமா? ஒருபோதுமில்லை. ஆகையால் கிரியாம்சையில் பிறரை நேசிக்க வேண்டுமானால், இப்போது நாம் பிறரை மறப்பதுபோல, கிரியாம்சையில் நம் நலனைப் பேண மறக்க வேண்டும். சாப்பிடுவதற்கு நாம் மறக்கவேண்டும்; உறங்குவதற்கு நாம் மறக்கவேண்டும்.

சுகவாழ்வில் ஊறி, செயல் திறனிழந்த ஒருவனை நாம் நல்ல மனிதன் என்கிறோம்; நல்ல வாழ்க்கை நடத்துகிறான் என்கிறோம். அப்படிப்பட்ட நபர் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி; எவ்வளவு சாந்தம், அடக்கம், ஒழுக்கம் உள்ளவனாயினும்சரி; அவன் சீலவாழ்க்கையுடையவனாயிருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. ஒரு கத்தி அழகான வேலைப்பாடு அமைந்திருக்கலாம்; நல்ல உருக்கால் செய்யப்பட்டிருக்கலாம். ஆயினும் அது கூர்மையாக விருந்து நன்றாய் நறுக்கவேண்டுமானால், அதைச் சாணையில் பிடித்தேயாகவேண்டும். நல்லவனாயும், நல்வாழ்க்கை நடத்துபவனாகவும் இருக்கவேண்டுமானால், தான் பிறரிடமிருந்து பெறுவதைக் காட்டிலும் அதிகமாகவே பிறருக்கு ஈயவேண்டும். ஆனால் செயல் திறனற்றவன் இவ்விதம் செய்யமுடியாது. அவனோ முழுச் சோம்பேறி; அவன் தேவைகளோ அனந்தம். பழக்கத்தால் அவனுக்கு அத்

தேவைகள் அத்தியாவசியமாய் விடுகின்றன. இரண்டாவதாக பிறர் உழைப்பின் பயன் முழுவதையும் தான் உபயோகப்படுத்திக் கொண்டு விடுவதால் அவன் தனக்கோ பிறருக்கோ உழைக்கச் சக்தியற்றவனாய் விடுகிறான். சுசிருசியாய் உண்டு களித்துச் சுகமான படுக்கையில் நெடு நேரம் தூங்கி, குடித்து மயங்கும் வழக்கமுள்ள ஒருவன் எவ்வளவு வேலை செய்துவிட முடியும் ?

சில ஆசாமிகள் இருக்கிறார்கள். தர்மத்திலும் சீலத்திலும் ஹிமாலய பர்வதத்திற்கு ஒப்பாகத் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் வாழ்க்கை மகாமோசமாயிருக்கும். இந்த மனிதர்கள் தங்களைப்பற்றிக் கூறிக்கொள்ளும் விஷயங்கள் உண்மைதானா என்று நாம் கண்டறிய முற்படுவதில்லை. ஏன்? தன்சம்பந்தமானபயம். தன்னுடையஊழலும் வெளிப்பட்டு விட்டால்? நாம் நம்மையும், பிறரையும் ஏமாற்ற முயல்வது சகஜமாய் விட்டது. அப்படி யிருக்கும் போது பிறர் ஊழலைக் கண்டறிய எப்படி முயல்வோம் ?

நல்ல ஸ்பிரிங் கட்டில்; இரண்டு மாட்ரஸ்; வழவழ வென்று இருக்கும் துப்பட்டிகள் இரண்டு அதன்மேல்; ஹம்ஸ தூளிகா மஞ்சங்கள்; கட்டிலுக்குப் பக்கத்தில் பாய் விரித்திருக்கிறது; (கீழே யிறங்கும்போது கால் தரையில் பட்டுவிட்டால் ஜில்லிட்டுப் போய்விடு மல்லவா?) கீழேஇறங்கியதும் காலில் அணிந்து கொள்ளச் செருப்பு வேறு; பக்கத்திலே ஜலமலபாதை கழிக்கப் பாத்திரங்கள்; ஜன்னல்களுக்குத் திரை; குளிர்காலத்தில் அறையில் கணப்புச் சட்டி; கோடை காலத்தில் ஜலம் கொட்டும் வெட்டிவேர்த் தட்டிகள்; க்ஷவர செட்டுகள் கையெட்டும் தூரத்தில்; கண்விழிக்கு முன் சுடச் சுடக் காப்பி......இவ்வளவு சௌக்கியமும் அமைந்த ஒருவன், அதிகமாகப் போனால் காலை 7 மணிக்கு எழுந்திருக்க முடியும்; அதாவது அவனுக்குப் பணிவிடை செய்பவர்கள் எழுந்து இரண்டல்லது மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு. எழுந்தபின் சிங்காரிப்புகள் வேறு. பெண்கள் விஷயத்தில், பின்னால் கூறப்பட்ட அம்சம் ரொம்ப விரிவானது.

இவ்விதம் சுகபுருஷனுக்குப் பகல் ஆரம்பமாகிறது. இதே தினுசில் பகல்பொழுது கழிகிறது. சாப்பாட்டிற்குப் பின் இரவுத் தூக்கம்.

மேற்குறிப்பிட்டது ஒரு சராசரி மனிதனின் வாழ்க்கையில் ஒரு நாளாகும். இந்த மனிதனுக்கு விசேஷமான கெட்ட பழக்க வழக்கங்கள் இல்லை. இவனை நல்வாழ்வு, அல்லது அறவாழ்வு வாழ்கிறான் என்று கூறுகிறோம். இது சரியா?

அறவாழ்வு வாழ்பவன் பிறர்க்கு நன்மை செய்யவேண்டும். மேற்குறிப்பிட்ட முறையில் முழுச் சோம்பேறியாகக் காலத்தைக் கடத்தும் சுகவாசி எவ்விதம் பிறருக்கு நன்மை செய்ய முடியும்? ஒருவன் பிறனுக்கு நன்மை செய்யுமுன் தீங்கிழைப்பதை நிறுத்த வேண்டும். இம்மனிதன் அறியாமலோ, அறிந்தோ பிறருக்குச் செய்யும் தீங்கைக் கணக்கிடுங்கள். இவன் அனுபவிக்கும் சுகம் அனைத்தும் பிறர் கஷ்டப்பட்டதன் பயனாகும். ஆதலின் இவன் பிறருக்கு எவ்விதம் நன்மை செய்தவனாக முடியும்? தான் இது காறும் பிறருக்குச் செய்து வந்த தீங்குக்கு ஈடு செய்ய வேண்டுமானால், பல அமானுஷ்யமான—அவன் சம்பந்தப்பட்டவரை—செயல்கள் புரியவேண்டும்! ஆனால் அவனுடைய சுகவாழ்வு ருசி, அச்செயல்களை ஆற்றவொட்டாது தடை செய்கிறது. அன்று மார்க்க அரேலியன் செய்ததுபோல், தாராளமாகத் தரையில் படுத்துக்கொண்டு தூங்கலாம். அதனால் உடலுக்கு உறுதியே பயக்கும். அச்செயல் மூலம், இது காறும் பிறருக்கு அளித்த சிரமத்தை மீண்டும் கொடுக்காது நிறுத்தலாம். தரையில் படுப்பதனால், மெத்தை தயாரிப்பவர் சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம். துப்பட்டி உபயோகிக்காமலிருப்பதால், உடல் நலம் குன்றி அவதியுறும் வண்ணாத்திக்குப் பரிசிரமம் கிடைக்கும். ஏன், தனக்காக உழைக்கும் இதரர்கள்போலவேயே எல்லாவிதத்திலும் வாழ்க்கை நடத்தினால், அவர்கள் எல்லோருக்குமே பிரயாசைகள் ஒழியும். இவ்விதம் பிரயாசைப் படுகையில், பல

விபத்துக்கள் நேரிடுவதும் சகஜம்; அவைகளும் ஏற்படா தொழியும். ஏழைகளும், தங்களை வாட்டுகிறுன் பணக்காரன் என்ற கோபத்தை விட்டொழிப்பர்.

தான் சுகமாக வாழவேண்டுமென்று விரும்புபவன் எவனுயினும் சரி, அறவாழ்க்கை நடத்த முடியாது. நூற்றுக் கணக்கான ஆட்களின் வேலைப் பயன் ஒரு மனிதனின் போகத்திற்காகச் செலவிடப்படுகிறது. உழைக்கும் தொழிலாளிகளோ ஏழைகள்; படிப் பில்லாதவர்கள்; விமோசனம் கிடைக்கவில்லையே என்று ஏங்கிச் சாகின்றவர்கள்; ஆலைகளிலும், தோட்டங்களிலும், வயல்களிலும் அல்லும் பகலும் உழைத்து மாய்கின்றவர்கள். இந்த அபலைகளின் ரத்தத்தில் நாம் திளேக்கிருேம் என்ற எண்ணம் நமது மனச் சாந்தியைக் குலைத்தவண்ண மிருக்கும். இதை எழுதுகின்ற நானும், படிக்கின்ற நீங்களும் இருக்கின்றோம். இருவருக்கும் உண்பதற்குப் போதிய உணவு அநேகமாகத் தேவைக் கதிகமாகவே இருக்கும். சுவாசிப்பதற்கு நல்ல காற்று, உடுக்கப் பலவிதமான உடை, பொழுதுபோக்க விளையாட்டுகள், எல்லாவற்றுக்கும் மேலாகப் பகலிலும் இரவிலும் சிரம பரிகாரத்திற்குப் போதிய நேரம் இவைகள் கிடைக்கின்றன. ஆனல் நமது அருகில் தொழிலாற்றும் ஜனங்கள் இருக்கிருர்கள். இவர்களுக்கு வாய்க்கு ருசியான உணவு கிடையாது; சுகமான வாச ஸ்தலம் கிடையாது; தேவையான ஆடை கிடையாது; பொழுதுபோக்குக் கிடையாது. ஒய்வு கிடையாது; தூங்குவதற்கு நேரம் கிடையாது. வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், குழந்தைகள், இவர்கள் இராப்பகலாயுழைத்து, சீக்கிலும் சிரங்கிலும் அவதியுற்று, இராத்தூக்கமின்றிச்செய்துமுடித்தபொருள்களை நாம்உபயோகிக்கிருேம். இந்தப்பொருட்களும் நமது ஜீவன் தரித்திருப்பதற்குஅத்யாவசியமானவைகளோ வென்ருல், அதுவுமில்லை. ஆதலின் ஜீவகாருண்யம் உள்ள ஒவ்வொருவனும் ஏழைகள், தம் இரத்தத்தைச் சிந்திச் செய்யும் ஆபரண வஸ்துக்களை, அத்தியாவசிய மில்லாத பொருட்களை, உபயோகிக்கக்கூடாது.

பீடி சுற்றுபவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் உண்மையில் இரக்கங்கொள்ளும் ஒவ்வொருவனும் பீடிசாப்பிடுவதை நிறுத்திவிடவேண்டும். ஏனென்றால், பீடி அதிகமாகச் சாப்பிடச் சாப்பிட அந்தப் பொருளின் உற்பத்தி அதிகரிக்கும். அப்பொழுது தொழிலாளர்களின் சிரமம் அதிகரிக்கும். இதேபோல் தான் இதர ஆபரணப் பொருட்கள் விஷயத்திலும் இருக்கவேண்டும். ரொட்டி செய்வது கஷ்டந்தான்; ஆயினும் நாம் ரொட்டி யில்லாது உயிர் தரித்திருக்க முடியாது; ஆதலின் அந்தத் தொழில் விஷயத்தில், நமது சமூகத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்படும்வரை, நாம் அனுதாபம் காட்ட முடியாம லிருக்கிறது. அனாவசிய வஸ்துக்கள் விஷயம் அப்படி யன்று.

ஒரு தொழிலாளர் கூட்டத்தினிடம் நமக்கு இரக்கம் தோன்றுமானால், அவர்கள் உழைப்பின் பயனாகிய சாமானை நாம் உபயோகிக்கக் கூடாது. இதுவே நமது சூத்திரமாக விளங்கவேண்டும்.

ஆனால் நமது ஜனங்களின் வாதம் விசித்திரமா யிருக்கிறது. சாதாரண மனிதனுக்கு என்ன தோன்றுகிறதோ அந்தக் காரணத்தைத் தவிர மற்றெல்லாக் காரணங்களையும் கூறுகின்றனர். 'லக்ஷரி' என்று சொல்லப்படும் வஸ்துக்களை நாம் தவிர்க்கவே வேண்டியதில்லை; தொழிலாளர் நிலைமையை உயர்த்தவேண்டுமானால் அதற்கு மேடைப் பிரசங்கள் செய்தால் போதுமானது, புத்தகங்கள் வரைந்தால் போதும்;அதோடு அவர்களின் உழைப்பின் பயனைத் தாராளமாக அனுபவித்துக்கொண்டு மிருக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

வேறு சிலர் கூறுகின்றனர்: தொழிலாளர்களின் உழைப்பை நான் பெற மறுத்தால் வேறு ஒருவன் பெறப் போகிறான்; அப்படி யிருக்கையில் நானே அனுபவித்தால் என்ன? இந்த வாதம் எதைப்போ லிருக்கிற தென்றால், மதுபானம் தீங்கானதுதான்; அதை நான் பருகாவிட்டால், வேறு எவனாவது பருகி வியாபாரம் நடக்கத்தான் செய்யும்;

ஆகையால், நான் மதுபானம் செய்யாம லிருப்பானேன்? என்பது போலிருக்கிறது.

இன்னும் சிலர், தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் சாமான்களை நாம் அதிகமாக வாங்கினால்தானே, அவர்களுக்குப் பணம் நிறையக் கிடைக்கும்? வயிறு நிறையும்? என்று கூறுகின்றனர். ஏன், அவர்கள் வயிறு நிறைவதற்கு இவ்விதம் நமக்கு வேண்டாத வஸ்துக்களுக்காக உயிரைக் கொடுக்கும்படி செய்துதான் பணம் கொடுக்கவேண்டுமா? வேறு வழி யில்லையா?

மற்றுமோர் வாதம் என்னவென்றால், உலகம் சரிவர நடக்கவேண்டும். தொழில் விபாகம் என்பது அவசியம் இருந்து தானே தீர வேண்டு மென்கிறார்கள். ஒருவன் குமாஸ்தாத் தொழில் செய்தால் மற்றொருவன் வக்கீல் தொழில் செய்கிறான்; ஒருவன் பஞ்சு கடைந்தால், மற்றொருவன் நெசவு செய்கிறான்—இப்படி விவாதிக்கிறார்கள். ஒருவன் தொழில் மற்றவனுக்கு இன்றியமையாததாம். இவர்கள் இப்படி விவாதிக்கையில், தங்கள் சுகானுபவங்களைத் தினே தினே பெருக்கிக் கொண்டு போகின்றனர். அப்பொழுதும், தாங்கள் செய்யும் வேலை (சோம்பேறித் தனம்) தாங்கள் பெறும் சௌக்கியப் பொருட்களுக்கு ஈடு என்று கருதுகின்றனர். என்னே பேதமை!

தொழில் விபாகம் என்று அளக்கிறார்களே, இவர்களை ஒருவரைப் பற்றி மற்றவரிடம் அபிப்பிராயம் கேளுங்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கேட்டால், நிலச்சுவான்தார்கள் விஷயத்தில் செலவிடும் பணம், அவர்கள் செய்யும் வேலைக்கு அதிகமானது என்று கூறுவர்; அதைப் போலவே ஒருவர் மற்றவரைச் சொல்லுவார்கள். இந்த நிலைமையைக் கண்டு அவர்கள் கலக்க முறுகிறார்களோ வென்றால் அதுவு மில்லை; அப்பொழுதும் யானைக்குப் பானை சரி என்றுதான் கூறுகின்றனர். இவ்விதமாக, வேலைக்கு ஏற்றபடி கூலி நிர்ணயிக்கப்படுவ தில்லை; கூலிக்கு ஏற்றபடி வேலையில்—அது நிஜமான வேலையோ மானஸீகமான

வேலையோ அது வேறு சங்கதி—தரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அந்தரங்கத்தில் ஏழைகளா யிருக்கும் காரணத்தால், ஏழைகளைத் துன்புறுத்தித் தாங்கள் வாழ்கிறோம் என்பதை ஒவ்வொரு பணக்காரனும் அறியத்தான் செய்கிறான்; பின்னும் இந்நிலையைச் சீர்திருத்த இவர்களுக்குத் தைரியம் இருப்பதில்லை. இதுதான் முதற்படி ஏறாமலே, அறநெறி வாழலாம் என்று மனப்பால் குடிக்கும் பான்மையின் விளைவு.

அந்த முதற்படிதான் தேவைக்குமேல் ஒரு அணுவும் வேண்டாமையாகும்.

VI

புலனடக்கம் என்ற விரதத்தைக் கைக்கொள்ளாமல் அறநெறியில் வாழமுடியாது; அதிலேதான் எல்லாம் தொடங்கவேண்டும்:

அறம் அல்லது தர்மம் ஒரு ஏணிபோன்றது. அதற்குப் பல படிகள் உண்டு; முதற்படி தாண்டினால்தான் அடுத்த படிக்குச் செல்லமுடியும். இதில் மேல் படிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், நமது சான்றோர்கள் சொல்லி வந்திருக்கும் விவேகம் அல்லது தன்னையடக்கியாளும் ஆற்றலைப் பெற்ற பின்புதான் முடியும்.

தன்னை யடக்கியாளும் திறன், புலனடக்கம் இந்த இரண்டு சொற்களும் ஒரே சக்தியைத்தான் குறிக்கின்றன. இந்தச் சக்தியைத் திடீரென ஒருவன் பூரணமாகப் பெற்றுவிட முடியாது; சிறுகச் சிறுகத்தான் பெற முடியும்.

புலனடக்கம் என்றால் என்ன? மனிதனை, ஆசைப் பேய்களிடமிருந்து மீட்டுக்கொள்வ தாகும்; ஆசைகளை விவேகத்திற்கு அடிமைப்படுத்தும் செயலாகும்.

மனிதனுடைய ஆசைகள் பலதிறப்பட்டவை. ஆதலின் அவைகளுடன் நடத்தும் போர் வெற்றிகரமாக முடிய வேண்டுமென்றால், ஆசைகளிலெல்லாம் அடிப்படையானவைகளை முதலில் ஜெயிக்கவேண்டும். இதர ஆசைகள் இந்த அடிப்படைகளிலிருந்து விளைந்தவைகளே யாகும். உடலை நன்கு அலங்கரித்துக் கொள்ளுதல், பொழுதுபோக்கு விளையாட்டுகள், ஊர்வம்பு இவைகள் அடிப்படையான ஆசைகளின் ஜன்யங்களாகும். பெருந்தீனி, சோம்பேறித்தனம், காமம் இவைகள் அடிப்படையான ஆசைகள். ஆதலின் ஆசைகளுடன் போர்செய்து ஜெயிக்க, இந்த அடிப்படையான ஆசைகளை முதலில் ஜெயிக்கவேண்டும்; அதுவும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிலேயே ஜெயிக்கவேண்டும். இந்த ஒழுங்கை மனிதவர்க்கத்தின் அனுபவம் நிதானித்து வைத்திருக்கிறது.

ஒரு குண்டோதரன், சோம்பேறித் தனத்தை ஜயிக்க முடியுமோ? சோம்பேறி காமவெறி யில்லாமல் இருக்கமுடியுமா? ஆதலின் புலன்களை அடக்கவேண்டுமென்றால், முதன் முதலில் பெருந்தீனி தின்பதை நிறுத்தவேண்டும். இதற்கு வழியென்ன? பட்டினி. ஆனால் தற்கால உலகத்தில் ஜனங்கள் பட்டினியின் தத்துவத்தை உணராது அதை ஏளனம் செய்கிறார்கள்.

அறநெறிக்கு முதற்படி புலனடக்கம்; புலனடக்கத்திற்கு ஆரம்பப்படி பட்டினி. ஆகையால் அறநெறிக்கே முழு முதற்படி பட்டினிதான் என்று சொல்ல வேண்டுமா?

பட்டினி கிடக்காமலே ஒருவர் நன்மை செய்ய நினைக்கலாம்; சொற்பனங் காணலாம். ஆனால் கிரியாம்சையில் நன்மை செய்ய வேண்டுமென்றால் பட்டினி கிடந்தே தீர வேண்டும். தெருவிலே நடந்து செல்ல வேண்டுமென்றால் முதலில் தரையிலிருந்து எழுந்து நிற்க வேண்டாமா?

அறநெறிக்குப் பட்டினி எவ்வளவு அவசியமோ, அதே போல் தீ நெறிக்குப் பெருந் தீனி இன்றியமையாதது.

நம் ஊரில் எத்தனையோ பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முகங்களைச் சற்று ஊன்றிக் கவனியுங்கள். கன்னமும் முகவாய்க்கட்டையும் தொங்குகின்றன. வயிறு துருத்திபோல் பருத்திருக்கிறது. இவைகள் எதைத் தெரிவிக்கின்றன? தூர்த்த வாழ்க்கையை அறிவுறுத்துகின்றன வல்லவா? வேறு எந்தவிதமாக இருக்கமுடியும்? இந்த மனிதர்களின் வாழ்க்கை லக்ஷ்யம் என்ன என்பதை விசாரியுங்கள். அநேகமாக நம் எல்லோரின் வாழ்க்கை லக்ஷ்யமுமே ஒன்றுதான்: வாய்க்கு ருசியாகச் சாப்பிடவேண்டும்; வயிறு வாடாமல் தின்னவேண்டும்; இவ்வளவுதான். உண்டோ, இல்லையோ? ஏழைகளுக்கு வேண்டுமென்றால், இந்த லக்ஷ்யம் கைகூடாம லிருக்கலாம்; ஆயினும் அந்தக் குற்றம் தரித்திரத்தைச் சாருமே யொழிய வேறொன்றுமில்லை. பணம் மட்டும் அவர்கள் கையில் கிடைத்துவிட்டால் போதும்; பணக்காரர்களைப் பின்பற்றத் தொடங்கிவிடுவர்; தீனியும் குடியும் கூத்தும் தான். வயிறு எவ்வளவுக்கெவ்வளவு நிறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பலம் ஊறுவதாக நினைக்கின்றனர்; ஆரோக்யம், சந்தோஷம் எல்லாம் அப்பொழுதுதான் உச்ச நிலை யடைவதாக அவர்கள் தியானம். இந்த எண்ணத்திற்கு, பணக்காரவர்க்கம் தூபம் போடுகிறது. ஏன், அதன் லக்ஷ்யமும் அதுவேதானே! படித்தவகுப்பாரே, (அவர்களுடைய டாக்டர்மார் அப்படித் தான் உபதேசித்திருக்கின்றனர்) வாய்க்கு ருசியாக, உடம்புக்குப் புஷ்டி தருவதாக, லகுவில் ஜீரணிக்க முடிவதாகவுள்ள ஆகாரங்களையே ஓயாமல் உண்கின்றனர். பெருந்தீனி தின்கின்றனர். இந்த உண்மையை நாம் எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் முடியாது.

இந்தப் பணக்கார வர்க்கம் இருக்கிறதே, அதன் உறுப்பினர்கள் சம்பாஷிப்பதை எப்பொழுதாவது நீங்கள் கேட்டதுண்டா? ஆகா! என்ன அழகான விஷயங்களைப் பற்றி அவர்கள் பேசுகின்றனர்! வேதாந்தம், சயின்ஸ், நற்கலை, கவிதை, பண்ட மாற்றல், பணமாற்றல், பொதுஜன நன்மை இளைஞர் கல்வி — இவைதான் அவர்கள் பேசுவது. இவ்

வளவு பேச்சிலும் அந்தரங்க அக்கரையுடன் பேசிய பேச்சு மிக மிகக் கொஞ்சமாய்த்தான் இருக்கும். மீதி யத்தனையும் ஹம்பக். வயிறு நிறைந்துவிடும்; இனி அதிகம் பிடிக்காது என்ற நிலைமை ஏற்பட்டவுடன், இந்த மாதிரிப் பேச்சுகள் நடை பெறும். பொழுது போகவேண்டாமா? ஆனால் அவர்களின் பிரதான நோக்கம், ஜீவிய ஆசை என்ன? சாப்பாடு, தீனி. இதுதான். அதிலும் கிழங்களின் விஷயத்தில் இவ்வுண்மை ரொம்ப நன்றாகப் பொருந்தும். எப்படிச் சாப்பிடுவது? எதைச் சாப்பிடுவது? எங்கே, எப்பொழுது சாப்பிடுவது? இது தான் சதா அவர்களின் தியானம்.

எந்தப் பண்டிகை, எந்தச் சமாராதனை, எந்த இழவு சாப்பாடில்லாமல் கழிகிறது? வாழ்க்கையே சாப்பாடு மயம் தானே!

ஊரூராய்ப் பிரயாணம் செய்யும் ஜனங்களைக் கவனியுங்கள். இந்த அம்சம் அவர்களிடம் அதிகமாகக் காணப்படும். "இந்த ஊரில் என்ன விசேஷம்?" "கோவில், குளம், தேர், திருவிழா, மிருகக்காட்சிச்சாலை, வாசகசாலை, ஹைகோர்ட்" "இதெல்லா மிருக்கட்டும்; எந்த ஓட்டலில் பக்ஷணங்களெல்லாம் 'ஓண்ணு'ந்தரமா யிருக்கும்?" இது தான் அடுத்த கேள்வி! எங்கேயாவது தேக் கச்சேரி அல்லது விருந்து நடந்தால், அங்கே ஆட்களின் வரவைக் கவனியுங்கள். பேஷாய் அலங்கரித்துக் கொண்டு ஆசனங்களில் அமர்ந்தவுடன் அவர்கள் கை ஊறலெடுக்கிறது; நாக்கில் ஜலம் சொட்டுகிறது; நாசித் துவாரம் துடிக்கிறது! அந்தச் சமயத்தில் அவர்களின் ஆனந்தத்தை என்னென்று சொல்லுவது?

மனிதனுக்கு அளிக்கக்கூடிய தண்டனைகள் எல்லாவற்றிலும் பெரிய தண்டனை என்னவென்றால், உப்பில்லாக் கஞ்சி மட்டும் கொடுப்பதாகும். இதை மட்டும் கொடுத்து வந்தால் போதும்; மனிதனுடைய வாழ்க்கையில் பிரதான இச்சை என்ன என்பது சீக்கிரம் வெளிப்பட்டுவிடும்.

கடைத்தெரு வழியாகக் கொஞ்சம் நடந்து செல்லுங்கள் ; கடைகளில் என்ன சாமான்கள் விற்பனையாகின்றன என்று கவனியுங்கள். ஒன்று தீனிப் பொருட்களாய் இருக்கும்; அல்லது ஆடையாபரணங்களாக இருக்கும். வேறு எப்படி இருக்க முடியும்? உயிர் வாழ்வதற்காக மட்டும் சாப்பிடுவது என்றால், தீனிப்பொருட்கள் பெருக மாட்டா. சாப்பிடுவதற்கென்றே உயிர் தரிக்க முயன்றால், தீனி வகை பெருகுவதற்குக் கேட்கவேண்டுமா ?

வெறும் அரிசிக் கஞ்சி உயிர் நிலைத்திருப்பதற்குப் போதுமானது. எத்தனையோ ஏழை மக்கள் அதைக் குடித்து அரோக திடகாத்திரர்களாய் வாழ்கின்றனர். ஆனால், அதில் கொஞ்சம் உப்போ சர்க்கரையோ கலந்தால் நன்றாயிருக்கும். பாலையும் கலந்து கொள்ளலாம். அப்பளம் வறுவல் இவைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். அரிசிக் கஞ்சியைவிட ஸேமியாப்பாயசம் நன்றாக இருக்கும். பாதம்கூர் அதைவிட நன்றாயிருக்கும். இப்படி ருசியான பதார்த்தங்களைப் பெருக்கிக்கொண்டே போகலாம். இந்த விதம் தினுசு தினுசாக ஆகாராதிகளை ஓயாமல் சாப்பிட்டுக் கொண்டு வருபவர்கள், தாங்கள் அறவாழ்வு வாழ முடியுமென்று கொஞ்சங்கூடக் கூச்சமின்றிக் கூறுகின்றனர் !

VII

அறநெறிக்கு லங்கணம் ஓர் இன்றியமையாத சாதனமாகும். ஆனால் எங்கு பட்டினி கிடக்கவேண்டும்? எப்படி? என்னென்ன சாப்பிடக்கூடியவை? எவைகளை யொதுக்க வேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன. ஒரு வேலையைச் செய்து முடிக்கவேண்டுமானால், முதலில் இன்னதைச் செய்யவேண்டும்; பிற்பாடு இன்னதைச் செய்யவேண்டுமென்ற நியதிக்ரமத்தை அறியாமல் செவ்வனே செய்ய முடியாது. அதேபோல் பட்டினியை எப்படித் துவக்குவது?

என்ன ஆகாரத்தைப் புசிக்கக்கூடாது என்பவைகளை அறிய வேண்டியது அத்யாவசியம்.

பட்டினி! இதை எப்படித் துவக்குவது!! இதையெல்லாம் கண்டு சிலர் சிரிக்கக்கூடும். நமது சமூகத்தை மூட எண்ணங்கள் சிறிது காலமாகக் கைப்பற்றிக்கொண்டு விட்டன. அதனால் உணவுக்கும் ஆத்மீக வாழ்வுக்கும் சம்பந்தமிருக்கிறது என்ற கூற்று நகைப்புக்கு இடமாய்விட்டது.

மனிதன் ஒரு அபூர்வ சிருஷ்டி. எவ்வளவுதான் கோரக் காட்சியாயிருந்தாலும், சகிக்க முடியாத வாசனையாயினும், கர்ண கடோமான சப்தமாயினும், ஆபாசப் பழக்கமாயினும், பழக்கத்தினால், அவைகள் அவனுக்கு ஸகஜமாய் விடுகின்றன.

சில நாட்களுக்குமுன் டேலாவில் ஆடுமாடுகளை உணவுக்காக வெட்டிக் கொல்லும் இடத்திற்குச் சென்றிருந்தேன். அந்தக் கட்டிடம் நவீனக் கொள்கைகளின் பிரகாரம் விஸ்தாரமாக அமைந்திருந்தது. அதிலே வெட்டப்படும் பிராணிகளின் அவஸ்தை மிகவும் சொல்பமாக இருக்கும்படி வசதிகள் அமைக்கப் பெற்றிருந்தன. நான் போனது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று ஏகமாகக் கால் நடைகள் வந்திருந்தன.

வெகு நாட்களுக்கு முன்பு உணவைப்பற்றிய ஒரு நூலை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதே ஆடுமாடுகள் கொல்லப்படும் இடத்தை நேரில் சென்று பார்க்க வேண்டுமென்று ஆசை யுண்டாயிற்று. ஆரம்பத்தில் எனக்குக் கூச்சமாயிருந்தது; அங்கே பிராணிகள் வதை செய்யப்படும் கோரத்தை ஸகிக்க முடியாதென்ற அச்சம். அதனால் அந்த ஆசையை நிறைவேற்றாமல் ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தேன்.

ஆனால் சமீபத்தில் அகஸ்மாத்தாக ஒரு கசாப்புக் கடைக்காரனைச் சந்திக்க நேர்ந்தது. அவனுடைய அலுவல் பிராணிகளின் உயிரை வாங்கவேண்டியது; அவ்வளவுதான். இதர வேலைகளைப் பிறர் பார்த்துக் கொள்வார்கள். அவன்

தனது ஊருக்குச் சென்றுவிட்டு லோவிற்குத் திரும்பும் வழி. அவனைக் கேட்டேன் : நீ இவ்வளவு பிராணிகளைக் கொல்லு கிறுயே, உனக்கு அவைகளிடம் இரக்கம் தோன்றவில்லையா? என்று. அதற்கவன் "இரக்கப்படுவதற்கு என்ன இருக் கிறது ? என் வேலையை நான் செய்து தீரவேண்டுமே" என்ருன். பிறகு நான் மாம்சம் மனிதனுக்கு அத்யாவசிய மில்லையென்றும், அதில்லாமலே உயிர் தரித்து நிற்கும் என்றும் சொன்னபோது, அவன் தன் தொழிலுக்காக வருத்தமுற்ருன். மேலும் சொன்ஞன் : "ஆனல் நான் என்ன செய்வது ? பிழைப்பு நடக்க வேண்டுமே ! முதலில் பிராணிகளைக் கொல்வதென்ருல் பயமாய்த்தா னிருந்தது. என் தகப்பஞர் ஒரு கோழிக் குஞ்சைக்கூடக் கொன்றது கிடையாது." ருஷியர்களுக்கு இயற்கையாகவே ஜீவ வதை என்ருல் பிடிக்காது. அதேபோல் இவனும் ஆரம்பத்தில் பயந்து கொண்டுதான் இருந்திருக்கிருன். ஆனல் பழக்கம் சகஜத்வத்தை ஏற்படுத்திவிட்டது. அநேகமாக வெள்ளிக் கிழமைகளில் அதிகமாகப் பிராணிகள் கொல்லப்படுகின்றன வென்றும், அன்று சாயங்காலம் வரை இந்த ஜோலி நடை பெற்றுக்கொண்டிருக்கும் என்றும் அவன்தான் எனக்குக் கூறினன்.

ஒரு மாஜி சிப்பாயைக் கொஞ்ச நாட்களுக்கு முன் சந்தித்தேன். அவன் தற்சமயம் கசாப்பு வேலையைக் கைக் கொண்டிருக்கிருன். அவனும், பிராணிகளைக் கொல்வது அதர்மம் என்பதைக் கேட்டு ஆச்சரிய முற்ருன் ; கடவுள் நமது ஆகாரத்திற்காகத் தானே அவைகளைச் சிருஷ்டித்திருக் கிருர் என்ருன். அவனுடன் கொஞ்ச நேரம் வாதாடிய பிறகு அவன் நான் சொன்னதை சரியென்று ஒப்புக்கொண் டான். கடைசியில் "பாவம், வாயில்லாப் பிராணிகள் ; எவ் வளவு நம்பிக்கையுடன் அவைகள் இந்தக் கசாப்புக் கடையி னுள் நுழைகின்றன !" என்ருன்.

உண்மையில் இது ஓர் மகா கோரமான விஷயம்தான். இதில் பிராணிகள் வதை செய்யப்படுவதல்ல கோரமான

அம்சம்; மற்ருென்று. தன்னைப்போன்ற ஜீவப்பிராணிகளிடம் கருணை என்ற உத்கிருஷ்டமான குணம் மனிதனுக்கு இயற்கைக் குணம்; இந்த உத்தமமான, இயற்கையான சம்பத்தையும் புறக்கணித்து, தீச்செயல் புரிகிருனே, இதுவே மகா கோரமானது. ஜீவ ஹிம்சை கூடாதென்ற தத்துவம் எவ்வளவு ஆழமாக மனித ஹ்ருதயத்தில் பதிந்திருக்கிறது, பாருங்கள் !

ஒரு தடவை நாங்கள் சிலர் மாஸ்கோ நகரத்திற்கு வெளியே நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது சில கட்டை வண்டிக்காரர்கள் அவ்வழியே சென்று கொண்டிருந்தனர். அவர்கள் எங்களை அந்த வண்டிகளில் ஏறிவரச் சம்மதித்தனர். நாங்களும் ஏறிக்கொண்டோம். நான் முதல் வண்டியில் ஏறினேன். அந்த வண்டியை ஓட்டியவன் பலாட்டியன்; காட்டான்; நன்ருகக் குடிப்பான் போலிருந்தது. ஒரு கிராமத்தில் நுழைந்தோம். அந்தச் சமயத்தில் செக்கச் செவேலென்ற ஒரு பன்றியைச் சிலர் கரகரவென்று பிடித்துக் கசாப்புச்செய்வதற்காக இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். பன்றியோ ஓரே கதறலாகக் கதறியது; அதன் குரலில் மனிதக்குரலின் சாயை கேட்டது. இன்னும் கொஞ்சதூரம் செல்வதற்குள், அம்மனிதர்கள் அதைக் கொல்ல வாரம்பித்தனர். ஒரு மனிதன் பன்றியின் கழுத்தை நோக்கி வாளால் ஒரு போடுபோட்டான். பன்றி இன்னும் பயங்கரமாகக் கத்திக்கொண்டே திமிறி அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓட வாரம்பித்தது. அதன் உடலிலிருந்து ரத்தம் பீறிட்டு ஒடிற்று. எனக்குக் கண் சூக்ஷ்மக்குறைவு. அதனுல் இவ்வளவு சம்பவங்களும் அவ்வளவு நுணுக்கமாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட மனிதனின் நிறம்போலிருந்த அந்தப் பன்றியின் தோற்றம் தெரிந்தது; அதன் பரிதாபக் குரலும் என் காதில் ஒலித்தது. ஆனுல் என் முன்னுலிருந்த வண்டிக்காரனே எல்லாவற்றையும் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தான். கடைசியில் அம்மனிதர்கள் அப் பன்றியை மறுபடியும் பிடித்துக் கீழே தள்ளி இந்தத் தடவை கழுத்தை அறுத்து

விட்டார்கள். பன்றியின் குரலும் அடங்கியது. அப்பொழுது அந்த வண்டிக்காரன் பெருமூச்சு விட்டுக்கொண்டு "இவ்வளவெல்லாம் செய்கின்றனரே; இதற்கெல்லாம் இவர்கள் கடவுளிடம் ஜவாப் சொல்ல வேண்டாமா?" என்றான்.

ஆ! மனிதனுக்கு ஜீவ வதையின் மேலுள்ள இயற்கையான வெறுப்பைப் பார்த்தீர்களா? எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருக்கிறது? ஆயினும் என்ன? பிறர் உதாரணத்தினாலும், ஆசைப்பேயின் தூண்டுதலாலும், கடவுளின் சித்தம் அது என்ற பொய் வேதாந்தத்தாலும், முக்கியமாகப் பழக்கத்தினாலும், ஜனங்கள் இந்த இயற்கை வெறுப்பை அடியோடு இழந்து விடுகிறார்கள்.

வெள்ளிக்கிழமை யன்று நேலாவிற்குச் சென்றேன். வழியில் ஒரு சிநேகிதரைச் சந்தித்தேன் இருவருமாகப் பிராணிகள் உணவுக்காகக் கொல்லப்படுமிடத்திற்குச் சென்றோம்.

"கட்டிடங்கள் எல்லாம் சவுகரியமாகத்தான் கட்டியிருக்கிறார்களாம். எனக்கும் நெடுகச் சென்று பார்க்க வேண்டுமென்று ஆசை தான். ஆனால் பிராணிகளைக் கொல்லும்போதுமட்டும் நான் பார்க்கமாட்டேன்'' என்றார். நண்பர்.

"என்? அதைத்தானே நான் பார்க்க விரும்புகிறேன்! மாம்சத்தைச் சாப்பிடவேண்டுமானால், கொன்று தானே யாகவேண்டியிருக்கிறது'' என்றேன்.

"ஊஹூம், நான் சகிக்கமாட்டேன்!'' என்றார் நண்பர்.

இவ்வளவுக்கும் இந்த நண்பர் பெரிய வேட்டைப் பிரியர்; பக்ஷிகளையும் மிருகங்களையும் வேட்டையாடுவதில் நிபுணர்!

அந்தக் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்தோம். வாசற்படியண்டை வரும்போதே துர்நாற்றம் குடலைப் புரட்டியது. உள்ளே புகுந்ததும் துர்க்கந்தம் அதிகரித்துக்கொண்டு வந்

தது. கட்டிடம் செங்கற்களால் கட்டப்பட்டது; நல்ல விஸ்தாரமாயிருந்தது; உயர்ந்த மேற்கட்டுகள்; புகைப்போக்கிகள். உள்வாசலைத் தாண்டிச் சென்றோம். வலது புறத்தில் ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் வேலி போடப்பட்டதோர் இடம். இங்கே தான் வாரத்திற்கு இரண்டுதடவை ஆடு மாடுகளின் மாம்சங்கள் விற்கப்படும். பக்கத்தில் காவலாளியின் இருப்பிடம் இருந்தது. இடது புறத்தில் பல அறைகள் இருந்தன. சரிந்த தளம்; குறுக்கும் நெடுக்குமாகக் கழிகள்; ஆடுமாடுகளை ஓடிப்போகாமல் தடுக்கும் கண்ணிகள். இங்கே தான் அவைகள் கொல்லப்படுகின்றன. முதலிற் கூறிய காம்பவுண்டுக்குள் காவலாளியின் இருப்பிடத்திற் கருகில் ஒரு பெஞ்சியில் 6 "கொலையாளிகள்" உட்கார்ந்திருந்தனர். அவர்களின் உடைகளில் ரத்தம் தோய்ந்திருந்தது. சட்டையின் கைப்பாகத்தை உயர இழுத்துச் சொருகிக்கொண்டிருந்தனர். அந்த முரட்டுக் கைகளில் இரத்தக் கறைகள் இருந்தன. அன்று 'வேலை' முடிந்து அரை மணி நேரம் ஆகிவிட்டபடியால், மிருகங்களைக் கொல்லும் காட்சியை எங்களால் காணமுடியவில்லை. இந்த அறைகளுக்கு இரண்டு பக்கங்களிலும் வாசல் இருந்தபோதிலும், அங்கே 'வீச்சம்' சகிக்கமுடியவில்லை. கீழே தரையில் காணப்பட்ட குழிகளில் ரத்தம் தேங்கிக் கட்டியாக உறைந்திருந்தது.

ஒரு 'கொலைஞன்' எங்களுக்கு ஆடுமாடுகளை அங்கே வெட்டுவது எப்படி என்பதை விஸ்தரித்தான். எனக்கு அது சரியாகப் புரியவில்லை. ஆனால் ஒரு கொடூரக் காட்சி மட்டும் என் மனதில் பதிந்தது. உண்மையில் அக்காட்சி அவ்வளவு கொடூரமாய் இருக்காதென்று நினைத்தேன். ஆனால் இந்த எண்ணம் தவறு என்பதைப் பின்னால் உணர்ந்தேன்.

அடுத்த தடவை நான் சீக்கிரமாகவே வந்து விட்டேன். அன்று ஜூன் மாதத்தில் ஒரு நாள். நான் முன்பு வந்த போதைக்காட்டிலும் இன்று துர்நாற்றம் அதிகமாக

வீசிற்று. "வேலை" நடந்துகொண்டிருந்தது. அறை முழுவதும் ஆடுமாடுகள் — செத்தவையும் சாகாதவையும் — நிறைந்திருந்தன.

வாசலண்டையில் வண்டிகளில் எருதும் பசுவும் நிறைந்திருந்தன. கன்றுகள் தாயுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருந்தன. வேறு சில வண்டிகளிலிருந்து இவைகள் கீழே இறக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இன்னும் சில வண்டிகளில் கொல்லப்பட்ட எருதுகளும், பசுக்களும்—அவைகளின் கழுத்தும் காலும் 'லொட' 'லொட' வென்று ஆடிக்கொண்டிருந்தன — வெளியே சென்று கொண்டிருந்தன. சில மனிதர்கள், இறந்துகிடக்கும் மாடுகளின் மீது இன்னின்னவருக்குச் சொந்தமானதென்று அடையாளமிட்டுக்கொண்டிருந்தனர். விலை பேசிக்கொண்டிருந்தனர் வேறு சிலர். எல்லாம் ரூபாய் அணுப் பைசாப் பேச்சாகவே இருந்ததே யொழிய, இவைகளைக் கொல்வது நியாயமா என்ற எண்ணம் லவலேசம்கூட இவர்கள் மண்டையில் உதிக்கவில்லை.

3490

முந்தின நாளைப்போல் 'கொலைஞர்கள்' வெளியே சாவகாசமாய் உட்கார்ந்து அரட்டை யடிக்கவில்லை. குடல் தெறிக்கக் கத்தியும் கையுமாக வேலை செய்து கொண்டிருந்தனர். அன்று சுமார் 100 உருப்படிகள் காலியாயிருக்கும் என்று நினைக்கிறேன். நான் இப்படிப்பட்ட ஒரு அறைக்குள் நுழைந்தேன். ஆனால் வாசல் பக்கத்திலே நிற்க வேண்டியதாயிற்று. உள்ளே மாடுகள் நிறைந்திருந்தன—இறந்தவைகளும் இறக்கப்போகின்றவைகளுமாக. செத்த உடல்களிலிருந்து ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. சில உயரே கட்டித் தூக்கப்பட்டிருந்தன. அவைகளிலிருந்தும் ரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. அங்கு வேலை செய்து கொண்டிருந்த எமதூதர்கள் மேலெல்லாம் ரத்தமயம். நானும் உள்ளே சென்றிருந்தால், எனக்கும் இரத்த அபிஷேகம் ஆகியிருக்கும். உயரே கட்டியிருந்த (செத்த) மாடு ஒன்றை ஒருவன் அவிழ்த்தான்; மற்றொன்றை ஒருவன் வெளியே

இழுத்துச் சென்முன். மூன்ருவது எருதைத் தாட்டிகமான ஒருவன் தோல் உரித்தான்.

நான் பிரவேசித்த வாசலுக்கு நேர் எதிராக மற்ெருரு வாசல் இருந்தது. அதன் வழியாக ஒரு கொழுத்த எருதை ஒருவன் உள்ளே ஓட்டிக்கொண்டு வந்தான். உள்ளே இருவர் அதைப் பிடித்திழுத்தனர். உள்ளே வந்ததுதான் தாமதம், ஒருவன் கத்தியை ஓங்கி அதன் மீது ஒரு போடு போட்டான். தட்சணமே அந்த எருது அதன் நான்கு கால்களும் ஒடிந்து போனதுபோல் தடாலென்று கீழே விழுந்தது; புரண்டு மலந்தது; கால்களையும் வாலையும் அடித்துக்கொண்டு அவஸ்தைப்பட்டது. உடனே ஒருவன், முகத்தண்டை சென்று எருதின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு அதன் கழுத்தைத் திருக ஆரம்பித்தான்; பின்னு மொருவன் 'சரக்' 'சரக்' என்று கத்திகொண்டு அதன் கழுத்தை யறுத்தான். ரத்தம் அருவிபோல் பிரவகித்தது. ரத்தம் தோய்ந்த ஒரு சிறுவன் டின் ஒன்றைக் கழுத்தினடியில் பிடிக்கவே, ரத்தம் அவ்வளவும் அதில் விழுந்தது. ஒரு டின் நிறைந்ததும் அச்சிறுவன் ஓடிப்போய் வேறு ஒரு டின் எடுத்துவந்து ரத்தத்தை ஏந்தினன். அதுவும் நிறைந்தது. அப்பொழுது எருது தன் பின் கால்களை உதைத்துத் திணறியது; வயிறு உப்பி உப்பி எழுந்தது. ரத்தம் வடிதல் நின்றதும் முன்னல் நின்றவன் தோலை உரிக்க ஆரம்பித்தான். எருதின் இரண்டு பக்கங்களிலும் தோலைச் சட்டை கழற்றுவதுபோல் உரித்துவிட்டான். பின்னும் பிராணவஸ்தை ஓய்ந்த பாடில்லை. இதற்கிடையில் அதன் கால்களை ஒடிக்க ஆரம்பித்தான் ஒருவன். பிற கால்களோடு இதையும் வீசி யெறிந்தான். கடைசியில் உடலை யிழுத்து உயரே கட்டித் தூக்கினர். அவஸ்தையும் நின்றது.

இவ்விதம் வாசலில் நின்றபடியே 4 எருதுகள் கொல்லப்படுவதைக் கவனித்து நின்றேன். ஒரே மாதிரி தான் கொன்ருர்கள். ஆனல் சில சமயங்களில், முதலில் விழும் வெட்டுக்குறித்வறிவிடும்; அப்பொழுது, மாடு ஆவேசத்துடன்

துள்ளிக் குதித்துத் தப்பிவிடும்; ஆனால் அவர்கள் அதை திரும்பப் பொறிக்குள் அடைத்து வெட்டிவிடுவார்கள்.

சுற்றிவந்து, ஆடுமாடுகள் நுழையும் வாசலுக்கு வந்தேன். இங்கே அவை எவ்விதம் உள்ளே தள்ளப்படுகின்றன என்பதைக் கவனித்தேன். கொம்பில் கயிற்றைக் கட்டி உள்ளேயிருந்து இழுக்கிறார்கள். ஆனால் மாடு ரத்த வாசனையை அறிந்து, உள்ளே செல்ல மறுக்கிறது. உடனே பின்னாலிருந்து ஒடிந்து போகும்படியாக வாலைப்பிடித்து முடுக்குகின்றனர். எருது வலி பொறுக்காமல் உள்ளே பாய்கிறது.

நான் வந்தபோது வழ வழ கொழு கொழு என்று இருந்த ஒரு எருதை உள்ளே கொண்டுபோக முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். நல்ல கறுப்பு நிறம்; அதில் வெள்ளைச் சுட்டிகள். உள்ளே யிருந்து கொம்பில் கயிற்றைக் கட்டி இழுத்தார்கள். அது கழுத்தைக் குனிந்து கொண்டு உள்ளே செல்ல மறுத்தது. உடனே ஒருவன், ரயில் எஞ்ஜினில் ஊது குழாயின் விசையைத் திருப்புவதுபோல் கட கட வென்று வாலைப்பிடித்துத் திருகினான். உடனே எருது துள்ளிப்பாய்ந்து உள்ளே யிருந்து இழுத்தவர்களைப் படு காயப் படுத்திற்று. அங்கேயே நின்றுகொண்டு கண்களில் தீப்பொறி பறக்க, திரு திரு வென்று விழித்தது; மேற் செல்ல மறுத்தது. வாலை வெடுக்கென்று மீண்டும் முடுக்கவே மறுபடியும் உள்ளே பாய்ந்தது காளை. கத்திக்காரன் கையை ஓங்கினான். குறி தவறிவிட்டது. காளை கர்ஜித்துக்கொண்டு வீராவேசத்துடன் நாலு கால்களையும் ஆகாயத்தில் எழுப்பி வெளியே குதித்தது. யார் விடுகிறார்கள்? சிறிது நேரம்வரை உயிர்ச்சக்தி நிறைந்து எகிறி விளையாடின காளை ஐந்து நிமிஷத்தில் செத்த பிணமாகத் தரையில் கிடந்தது. செக்கச் செவேலென ஒரு முகத்தை, வெறும் கண்ணாடிபோல் ஒளி மழுங்கிய கண்களைத்தான் காண முடிந்தது—தோலை உரித்து விட்டார்கள்.

பிறகு ஆடுகள் வெட்டுமிடத்திற்குச் சென்றேன். அங்கு வேலை முடிந்து விட்டது. இரண்டே இரண்டு கத்திக்காரர்

கள் மட்டும் இருந்தார்கள். அறை அவ்வளவு விசாலமான தல்ல. தரை சரிவாகக் கட்டப்பட்டிருந்தது. அங்கே ஒரு மேஜையும் போடப்பட்டிருந்தது — ஆடுகளை அதன் மீது படுக்கவைத்து வெட்டுவதற்கு. அந்த இரண்டு ஆசாமிகளும் பேசிக்கொண்டிருந்தனர். வயிறு ஊதிச் செத்துக்கிடந்த ஒரு ஆட்டின் வயிற்றில் ஒருவன் தட்டிக்கொண்டிருந்தான். மற்றவன் — இருவரில் இளையவன் — சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்.

எனக்குப் பின்னால் ஒரு மாஜி சிப்பாய் ஒரு ஆட்டுக் குட்டியை—ஒரு வயதுக் கதிகமிராது—இழுத்துக்கொண்டு வந்தான். கத்திக்காரர்களுக்குச் சலாம் போட்டான். ஆட்டின் கால்களைக் கட்டி மேஜையின்மேல் படுக்க வைத்தான். மூவருக்கும் பேச்சு சுவாரஸ்யமாய் நடந்துகொண்டிருந்தது. மேஜையிலிருந்த ஆடும், செத்த ஆடுபோலேயே கம்மென்று கிடந்தது. ஆனால் வால் மட்டும் 'விசுக்' 'விசுக்' என்று அடித்துக்கொண்டது. மூச்சும் அதிகமாக வந்து கொண்டிருந்தது. சிகரெட் பிடித்துக்கொண்டிருந்த இளைஞன் பேச்சுவாக்கிலேயே கத்தியை அந்த மேஜை மீதே தீட்டினான். இடது கையால் ஆட்டின் முகத்தைப் பிடித்துக்கொண்டு அதன் கழுத்தை அறுத்தான். ரத்தப்பெருக்கு நின்றதும் அணைந்து போன சிகரெட்டை மீண்டும் பற்றவைத்துக் கொண்டான். பேச்சுக்குக் கொஞ்சம்கூட இடைஞ்சல் ஏற்பட வில்லை. காரியம் முடிந்துவிட்டது. கொஞ்சநேரம் ஆட்டின் தேகம் துடித்தது. பிறகு நின்றுவிட்டது. அம்மம்ம, என்ன கோரம்!

தினப்படி வீடுகளில் எத்தனை கோழிகள் காலியாகின்றன? ஐயோ, அவற்றின் கழுத்துகளைத் திருகும்போது அவை சிறகுகளை எவ்வளவு பரிதாபகரமாய் அடித்துக் கொள்கின்றன! "டஸ்!" என்றால் அலறிப்புடைத்துக் கொண்டு ஓடுகிற, சர்க்கரைப் பாகுபோல் இளகிய சித்தமுள்ள சீமாட்டிகள், இந்தப் பிராணிகளின் சதையை எவ்வளவு ஆவலுடன் உண்கிறார்கள்? தாங்கள் செய்வது ரொம்பக்

சரியானது தான் என்று வியாக்கியானம் வேறு செய்கிறார்கள். எப்படித் தான் இந்த இரண்டு முரண்படும் கொள்கைகளையும் ஒரே மூச்சில் சொல்லி முடிக்கிறார்களோ தெரியவில்லை.

தேகம் மிகவும் துர்ப்பலமாயிருக்கிறது, கறிகாய்களின் போஷணை போதாது, மாம்சம் அத்தியாவசியம் என்று அந்த அம்மாளுக்கு டாக்டர் உபதேசம் செய்திருக்கிறார். ஆனால் அவளின்சித்தமோ பாகுபோன்றது,ஜீவஹிம்சைக்குச் சிறிதுகூட அனுமதி கொடாது, அந்தக் கோரத்தை கொஞ்சம் கூடச் சகிக்காது. ஆனால் உண்மை என்ன? இயற்கைக்கு முரண்பட்ட மாம்ச உணவின் காரணமாகவே உடல் நலம் குன்றியிருக்கிறது. மாம்சத்தை 'அபக்' 'அபக்' என்று விழுங்குவதனால்தான் மிருகங்களைக் கொல்லும் காட்சியைக் கண்டு அவள் பயப்படுகிறாள் போலும்!

VIII

மேற் குறிப்பிட்டவைக ளெல்லாம் நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள்தாம்; தெரியாதென்று பாசாங்கு செய்வதில் புண்யமில்லை. நாம் தீக் கோழிக ளல்ல; தலையை மண்ணில் புதைத்துக்கொண்டு பிறர் நம்மைக் காண மாட்டார்கள் என்று எண்ணுவதில் பிரயோசனமில்லை. இதிலும் ஒரு விசேஷமென்ன வென்றால், நாம் எதைக் கண்டு சகிக்க மாட்டோமென்று கூறிக்கொள்கிறோமோ, அதையே சாப்பிடுகிறோம்! அதிலும் இந்த மாம்சம் வாழ்க்கையில் அத்தியாவசியமான பொருளா யமைந்து விட்டிருக்கும்போது கண்ணை மூடிக்கொண்டிருப்பதில் ப்யனில்லை.

என் சொல்லில் நம்பிக்கையில்லை யென்றால், உணவைப் பற்றிப் பல ஆராய்ச்சியாளர்கள், வைத்திய நிபுணர்கள் நூல்கள் இயற்றியிருக்கின்றனர்; அவற்றைப் படியுங்கள். அவர்கள்எல்லோரும் மனிதவர்க்கத்திற்கு மாம்சமேதேவையில்லை என்று உறுதி கூறுகின்றனர். சில விவேக மற்ற டாக்டர்

கள், "எங்கள் பாட்டனார் காலம் முதல் மாம்சம் தான் சாப்பிடுகிறோம்; அதனால் அதைக் கைவிடமாட்டேன்" என்று சொன்னால் நீங்கள் அதைக் கேட்கக்கூடாது. அறிவாளிகளின் சொல்லைக் கேட்கவேண்டும். அகங்காரம், ஆத்திரம், காமம், துன்மார்க்கம், குடி இவை தான் மாம்சம் தின்பதால் ஏற்படும் குணங்கள். சூதுவாதற்ற குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் இவர்கள் அறநெறியில் வாழ நினைத்தவுடன் இவற்றை இயற்கையாகவே விட்டொழிக்கிறார்கள்; தங்கள் முயற்சியில் வெற்றியடைகிறார்கள். ஆனால் அவர்களுக்கே தங்கள் வெற்றியின் மர்மம் புலால் உண்பதை விட்டதுதான் என்று தெரியாது.

'ஒருவன் அறநெறியில் வாழவேண்டுமென்றால், புலாலுண்பதை விட்டுவிட்டால் போது மென்கிறீர்களா?' என்று நீங்கள் கேட்கலாம். இல்லை.

நான் சொல்வதெல்லாம், அறநெறியில் வாழவேண்டுமென்று ஒருவன் விரும்பினால், அவன் முதலாவது சில நல்லப்பியாசங்களை கற்றுக்கொள்ளவேண்டும்; அவன் உண்மையாகவே அறவாழ்க்கையில் வேட்கை கொண்டவனாயின், இந்த ஒழுக்கங்களை நிச்சயம் கற்றுக்கொள்வான். இவற்றிலெல்லாம் முதன்மையாகக் கற்றுகொள்ள வேண்டியது உணவில் கட்டுப்பாடு, அதாவது பட்டினி கிடக்கப் பழகல். உணவுக் கட்டுப்பாட்டில் முதற்படி, புலால் மறுத்தலாகும். மாமிசம் தவிர்ப்பது, அது கொடிய காம இச்சைகளை உண்டாக்குகிறது என்பதற்காக மட்டுமல்ல; மாமிசம் வேண்டுமானால் ஜீவ வதை செய்யவேண்டி யிருக்கிறது; ஆனால் ஜீவ வதை தீச் செயல், மேலும் மாமிச உணவு, மனிதன் உள்ளத்தே பதிந்திருக்கும் கொடிய விரோதிகளாகிய பேராசை, ருசி, இன்பம் இவற்றைத் திருப்தி செய்வதற்கேயாகும். ஆதலின் எப்படியும் மாமிச உணவை முதலில் தவிர்க்க வேண்டும்.

'மாமிச உணவு இயற்கைச் சட்டத்திற்கு மீறியது என்ற உண்மை வெகு நாட்களாக உலகத்தில் இருந்து வந்

திருந்தால், ஜனங்கள் ஏன் இதுவரை அதை உணராமலிருக்கின்றனர்?' என்று சிலர் கேட்கலாம். உலகத்தில் நற்காரியங்கள் எல்லாம் மெதுவாகத்தான் நடைபெறுகின்றன; ஆனால் அதில் முன்னேற்றம் உண்மையிலேயே இருக்கிறதா என்பதற்கு, வளர்ச்சியும், வளர வளரப் பெருகும் வேகமும் தான் அத்தாட்சி.

உதாரணமாக மரக்கறி உணவு இருக்கிறது. இது நாளுக்கு நாள் உலகத்தில் பலமாக வேரூன்றி வருகிறது. மரக்கறி சாப்பிட வேண்டுமென்ற எண்ணம் ஆதிகாலம் தொட்டு, இந்நூலில் நான் குறிப்பிட்டிருக்கும் மார்க்க ஆரேலியன், சொக்ரதன் இவர்கள் நாளிலிருந்தே வளர்ந்து வருகிறது. நூல்களிலும் அப்படி, வாழ்க்கையிலும் அப்படி. அவ்வியக்கம் இப்பொழுது எவ்வளவு பெரியதாக மலர்ந்து விட்டிருக்கிறது, பாருங்கள். மரக்கறியுணவின் மேன்மையைப்பற்றி எத்தனை நூல்கள்! நாளுக்கு நாள் ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, முதலிய நாடுகளில் மரக்கறி யுண்போரின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது.

வானரசைப் பூமியில் ஸ்தாபிக்க வேண்டுமென்று முயலும் மனிதர்களுக்கு இவ்வியக்கம் மிகவும் உற்சாகம் அளிக்கும். இதனால் பூஸ்வர்க்கத்திற்கு மரக்கறி அத்தியாவசியம் என்று பொருளில்லை. மரக்கறி யுண்பது, ஜனங்கள் உண்மையாகவே அறவாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள் என்பதற்கு அறிகுறியாகும்; ஏனென்றால் இது அறநெறிக்கென்று வகுக்கப்பெற்ற படிகளில், முதற்படி.

இந்நிலைமையைக் கண்டு நாமெல்லோரும் சந்தோஷிக்கவேண்டும். ஒரு வீட்டின் மாடிக்குப் போகவேண்டும்; அதற்கு வீட்டைச் சுற்றியுள்ள சுவர்கள் வழியாகவோ, ஜன்னல் மூலமாக ஏறுவதற்குப் பிரயத்தினப்பட்டு, முடியாமல், தட்டித்தடுமாறி, படிக்கட்டின் முன் தோன்றி, இந்த மாடிக்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டு முதற்படியில் கால் வைத்தால், யாருக்குத்தான் சந்தோஷம் வராது?

வாழ்க்கையின் வெறுப்பு

டால்ஸ்டாய் எழுதிய நாவலைத் தழுவியது.

காதல் என்கிறோம்; காமம் என்கிறோம்; இன்னும் என்னென்னவோ சொல்லுகிறோம். ஒரு குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் பணத்திலோ, ரூபசௌந்தரியத்திலோ, மக்கட்பேரிலோ ஒன்றிலும் குறைவில்லை. மணமாகும் சமயத்தில் ஒருவருக்கு மற்றவர் மேலிருந்த அன்பு அளவிடற்கரியது. ஆயினும் அவர்கள் வாழ்க்கை இன்பகரமாயில்லை; கடுவன் பூனைபோல் ஒருவரை ஒருவர் பார்த்து உறுமிக்கொண்டனர். இது ஏன்?

அது மட்டுமோ? பாணி க்ரஹணம் செய்து கொண்ட அதே கையால் வாளை யுருவி மனைவியின் விலாவில் பாய்ச்சுகிறான். இது ஏன்?

மஹான் டால்ஸ்டாயின் அனுபவக் களஞ்சியத்திலிருந்து பொருக்கி எடுத்த கதை இது; அற்புதமான தமிழ் நடை. படிக்கப் படிக்கத் தெவிட்டாது.

விலை அணா 6

சுதந்திரச் சங்கு காரியாலயம், சென்னை.

The B. N. Press, Madras.

சீக்கிரம் வெளிவரும்

சமூகப் பிரச்னைகள்

சோஷலிஸ்டு சமூகத்தை அறிய வேண்டுமாயின் இப் போதைய சமூகத்தின் உண்மை நிலைமையை தெளிவாக உணரவேண்டும். ஆங்கிலத்தில் ஹென்ரி ஜார்ஜ் இயற்றிய இந்நூல் மேல் நாட்டு சமூகங்களைப் பற்றியதாயினும் நமது சமூகமும் பொருள் நிலையில் மேல்நாட்டை ஒத்ததே. இப் போதைய சமூகத்தின் தன்மையையும், அதில் நிகழும் பொருள் கொள்ளையையும், அடக்கமுடியாத துன்பம் விளை விக்கும் படு ஏழ்மைத்தனத்தையும் உள்ளது உள்ளவாறே விவரிக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ சமூகம் தெரியா மலே இயற்றும் கொடுமைகளை உள்ளபடியே ஓவியமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவர் கூறியிருக்கிற பரி காரங்களை அனுஷ்டித்தால் இரத்தக்களரியின்றி சோஷலிஸ்டு சமூகம் சீக்கிரத்தில் நிறுவப்படும். இப்புத்தகம் ஆங்கிலத் தில் 10,00,00 பிரதிகளுக்கு மேல் செலவாயிருக்கிறது.

இன்றியமையாத நூல் — விலை அணா. 12

நான் ருஷ்யாவில் கண்டவை

நித்தியானந்த பானர்ஜி எழுதியது — அணா. 12

அப்டன் ஸிங்களேர் எழுதியவை.

உபவாச சிகிச்சை (Fasting Cure) அணா. 4

வரவிடாதே அல்லது ஜனநாயகத்தின் சோதனை. ஸ்பெயினில் நடக்கும் சுதந்திரப்போர் சம்பந்தமான நாவல். (No Pasaran) அணா. 4

சங்கு காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

மலிவுப் பிரசுரங்கள்—ஆசிரியர் : சங்கு கணேசன்

பொய்யும் எமாற்றமும் தொலையும்
காலம் வந்தது —பாரதி.

அறியாமை,
வறுமை, அடிமை,
கொலை, களவு
மூடக்கொள்கைகள்
முதலியவைகளைத்
தொலைக்க
போர் துவக்கம்
ஆய்விட்டது

முதலில்

கள்ளரக்கனை

தொலைக்க தொண்டர்
படை தேவை

நிபந்தனை :

உங்களின் ஊக்கந்தான்

திட்டம் வேண்டுமானால்
அமெரிக்கா நாவலாசிரியர்
அப்டன் ஸிங்களேர்
எழுதிய "வெட் பரேட்"
என்னும் நூலைத் தழுவிய

மதுவிலக்கு மங்கையை படிக்கவும்.

படங்களுடன் கூடியது. விலை அணு **12.**

சங்கு காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.